# அன்பின் சுவடுகள்



பாதை : 12 ஜூலை - 2023 தடம் : 22



# இந்திய மண்ணின் இறைப்பணியாளன்

# அன்பின் சுவடுகள்

பொருளடக்கம்


01 ஆசிரியர் பக்கம்

02 நிர்வாகியின் குரல்

03 கரப்பான் பூச்சி காதல்

04 சாட்சியமா சந்தேகமா?

07 இடறும் கவனமும் தொடரும் அவலமும்

09 மலையிலிருந்து புறப்பட்ட அன்பு நதி

11 கிரிக்கெட்டும், மல்யுத்தமும், மக்களாட்சியும்

13 விவிலியம் விழைவோம்

16 பெண்களுக்கு கல்வியே ஆயுதம்

17 தாயின் 7 வார்த்தைகள்

18 பூசாரிக்கு வந்த புதுவாழ்வு

19 புனைவுகளில் புனித தூசையப்பர்

21 மக்கள் பணியே மகசேன் பணி

22 வலிப்பு நோய்

24 பாலைவனம் போன நிலா

25 வெள்ளிவிழா காணும் மாணவர் இல்லம்

27 வரலாற்று சின்னங்களாக தலைமுறைதோறும் வாழ

29 முட்டையில் நுழைந்த ஆவி

31 விவிலிய வினா – விடை



நிர்வாகி
அருட்பணி. ரொனால்டு, SdC

ஆசிரியர்
அருட்பணி. பிரான்சிஸ் சேவியர், SdC

ஆலோசகர் குழு
அருட்பணி. ஆபிரகாம், SdC
அருட்பணி. ஆரோக்கிய ராஜ், SdC
அருட்பணி. மரிய பால் ராஜ், SdC
அருட்பணி. லூயிஸ் பாஸ்கர், SdC
அருட்பணி. அருண்குமார், SdC
திரு. ஆரோக்கியம்
அருட்பணி. எடல் வினோத்ராஜ், SdC
திரு. ரோனா ஆல்பர்ட்
உ. ஜீவானந்தம்

கணினி வடிவமைப்பு
உ. ஜீவானந்தம், Reno Media Creations

அலுவலக உதவி
தொன் குவனெல்லா உயர்
குருமட அருட்சகோதரர்கள்

அச்சகம்
*JVS* பிரிண்டர்ஸ், சென்னை



முகவரி
ஆசிரியர்,
அன்பின் சுவடுகள்,
இறைபராமரிப்பு மறை மாநில இல்லம்,
29, ஜேம்ஸ் தெரு, பூந்தமல்லி,
சென்னை -600 056.
செல். +91 98842 45851



sanguanella india
Don Guanella Media
sanlouisguanella@gmail.com
https//guanelliansindia.in/
https://servantsofcharity.org


in all things love
Servants of Charity


வங்கிக் கணக்கு

| | |
|---|---|
| AC NO. | : 177801000009081 |
| IFSC CODE | : IOBA0003767 |
| Bank | : Indian Overseas Bank |
| Branch | : Seneerkuppam |


தனிசுற்றுக்கு மட்டும்...



அருட்பணி பிரான்சிஸ் சேவியர் SdC

# ஆசிரியர் பக்கம்

**அன்பிற்கினிய வாசகர்களே!**

என்னடா நடக்குது நம்ம நாட்டுல? என்ற கேள்வியோடு இந்த மாத சிந்தனையைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். எங்குப் பார்த்தாலும் சண்டை, சச்சரவு, அநீதி, சுயநலம், ஆதிக்க மேலாண்மை, சாதி என்று அடுக்கிக் கொண்டே போகும் அளவிற்குப் பல்வேறு பிரச்சனைகள் மத்தியில் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை.

மணிப்பூரில் நடந்து கொண்டிருக்கும் இயல்புக்கு மாறான நிகழ்வுகளை அனைவரும் மனக்கவலையுடன் கேள்விப்பட்டு வருகிறோம். அநேக மக்கள் இனத்தின் பெயரால் கலவரத்திற்கு உள்ளாகி தங்களது உயிர்களை, உடைமைகளை, வாழ்வாதாரங்களை இழந்து நிற்கிறார்கள் என்பதை அறியும்போது நம் மனத்துயரம் அதிகரிக்கிறது. ஓர் அமைச்சர் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட, அவரின் பெயரால் வலைத்தளங்களிலே நடந்து கொண்டிருக்கும் அரசியல் கலவரங்களை ஒவ்வொரு நாளும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். விளையாட்டு வீராங்கனைகள் நீதிக்காக குரல் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கின்ற நிகழ்வுகளும் நம் நாட்டிலே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு துன்பமாக நாம் காணும் சவால்கள், அநீதி, மிரட்டல், கொலை, பொய் வழக்குகள், அவமானம், விபத்தில் ஏற்படும் உயிரிழப்புகள், ஆணவக்கொலைகள், மனவளர்ச்சியற்ற நிலையிலும், ஊனத்துடனும் குழந்தைகள் பிறப்பு, குழந்தைப்பேறு இல்லாதவர்களின் வலி வேதனைகள் என இத்தனை துன்பங்களும் கடவுளிடமிருந்து வந்ததா? என்று ஒரு நிமிடம், சற்றுப் பொறுமையாக நாம் சிந்தித்தோம் என்றால் பதில், கண்டிப்பாக இல்லை என்பதுதான்.

திருவிவிலியத்தில் தொடக்கநூல் புத்தகத்தில் கடவுள் தாம் படைத்தது அனைத்தையும் நல்லதெனக் கண்டார் என்று வாசிக்கிறோம். கடவுள் இந்த உலகத்தை மக்கள் அனைவரும் ஆண்டு அனுபவிக்க, நிலத்தையும், நீரையும், ஆகாயத்தையும், நெருப்பையும், காற்றையும் படைத்து இவை அனைத்திற்கும் மனிதர்களை ஆள்பவர்களாக ஏற்படுத்தினார். ஆனால் காலப்போக்கில் மனிதனின் சுயநலத்தால் படைக்கப்பட்ட சாதி, மதம், பணக்காரன், ஏழை, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பிரிவுகள் மனிதர்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தி அமைதியைக் குலைத்து அதர்மம் வெல்வதற்கான வழிவகையை ஏற்படுத்தின.

கடவுள் தம் படைப்பின் ஆறு நாட்களில் இந்த சமுதாயத்தில் இன்று புரையோடிக் கிடக்கும் சாதியையோ, மதத்தையோ மற்ற பிரிவுகளையோ உருவாக்கவில்லை. ஆனால் ஆண்டாண்டு காலமாக சுயநலமிக்க மனிதர்களால் உருவாக்கப்பட்ட இவை நம் சிந்தனையை மழுங்கடித்து பிரிவுகளை உண்டாக்கி மனிதர்களின் அமைதியையும் ஒற்றுமையும் சிதைத்துக் கொண்டிருக்கின்றன என்பதற்கு இந்தியாவில் நாம் சந்தித்துக் கொண்டிருக்கின்ற விரும்பத்தகாத நிகழ்வுகளே சிறந்த சான்றுகளாகின்றன. சவாலான இந்த சூழ்நிலைகளுக் கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறாக பதிலளிக்கப் போகிறோம் என்று சிந்திப்போம். உண்மையில் நம்முடைய செயல்பாடுகள் இறைவன்மீது கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர் இந்தியாவிற்கு வந்து இறை இயேசுவின் நற்செய்தியைப் போதித்து இம்மண்ணில் மறைச்சாட்சியாக உயிர்நீத்த புனித தோமையாரே ஆவார். கிறிஸ்து இயேசுவே உண்மையான கடவுள் என்பதை விசுவசித்து **என் ஆண்டவரே! என் தேவனே!** என்ற நம்பிக்கை மிகுந்த சொற்களின் மூலம் இயேசுவின் உயிர்ப்பை உலகத்துக்கே உணர்த்தி, செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம் என்பதை நம் இந்திய மண்ணிலே எண்பித்துக் காட்டினார்.

கிறித்தவர்களாகிய நாம் அனைவருக்கும் ஆகச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் திருத்தூதர் தோமையாரின் நினைவை ஆண்டுதோறும் ஜூலை மூன்றாம் நாள் சிறப்பிக்கிறோம். திருத்தூதரின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் கிறிஸ்துவை நம் அறத்திலும் அன்பிலும் வெளிப்படுத்துவோம். வேற்றுமைகள் எந்த நிலையில், எந்த இடத்தில் முளைத்தாலும் அதை முளையிலே கிள்ளி எறிய வேண்டியது நம் கடமை என உணர்வோம். மக்கள் அனைவரும் மனித நேயத்துடனும், அமைதியுடன் வாழும் வகையில் நம் செயல்களில் விசுவாசமும், நம்பிக்கையும் மேலோங்கிய நிலையில் முயற்சிகளைத் தொடர்வோம்.



# நிர்வாகியின் குரல்

அருட்பணி ரொனால்டு SdC

சூரிய விடியலுக்காய் மண்ணுக்குள் மௌனம் காக்கும் விதைகளைப்போல கிறிஸ்துவின் அன்பை அகிலம் அறிய அனுதினமும் உழைத்திடக் காத்திருக்கும் அன்பு சகோதரமே...!

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், இறைவனின் கண்களுக்கு முன்பாக புனிதமானவனாக வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பும், ஆசையும் எதார்த்தமே. புனிதத்தை புறந்தள்ளி மனிதத்தை இழந்த மனிதர்களில் நாமும் ஒருவரா? என்ற ஒற்றைக் கேள்வியோடு நம் பயணத்தைத் தொடருவோம், வாருங்கள். புனிதம் என்பதை எட்டாக் கனியாக்கி, எதார்த்தமான வாழ்வை இழக்காமல் அனுதின வாழ்வில் இறைவனைத் தேடி மனிதத்தில் மறைந்திருக்கும் புனிதத்தை அடைவதே நம் இலக்கு.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய சிந்தனைகள் என்னும் தலைப்பில் அருட்தந்தை ஜெரி அவர்கள் வெளியிட்ட ஒரு புத்தகத்தில் 'திருச்சபையால் புனிதர் பட்டம் பெற்றவர்களும் தூய ஆவியாரின் அருளால் நிரப்பப்பட்ட ஒவ்வொருவரும் புனிதர்களே. குழந்தைகளுக்காகத் தியாகங்களைச் செய்து அவர்கள் நலனில் அக்கறை கொள்ளும் பெற்றோர்களும், மற்றவரை ஒளியில் வாழவைக்க மெழுகாய் தங்களைக் கரைத்துக்கொள்ளும் உறவுகளும், வயது முதிர்ந்தாலும் வாயாரச் சிரித்து மற்றவர்களை உற்சாகப்படுத்தும் மாண்பு கொண்ட முதியவர்களும் புனிதர்களே' என்று குறிப்பிடுகிறார். அருகிருக்கும் ஒவ்வொருவரும் புனிதரே அடுத்தவர் ஒவ்வொருவரும் புனிதரே. ஒருவர் புனிதராக வாழ்வதற்கு ஆயராகவோ, குருவாகவோ, துறவியாகவோ இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை அனைவரும் அதாவது பொதுநிலையினர் தங்களுக்குரிய மானிட வாழ்வினை மாண்புடன் வாழ்ந்திடும்பொழுது புனிதத்தில் வளர்கின்றனர் என்பார்.

புனிதர்களாக வாழ மட்டும் அல்ல மறைச்சாட்சியாக மாறவும் தாரக மந்திரம் ஒன்று உண்டு. திருத்தந்தை முதலாம் கிரகோரி அவர்களால் எழுதப்பட்டு கி.பி. 590 மற்றும் 591-களில் வெளிவந்த மிகவும் பிரபலமான மற்றும் அதிக மக்களால் வாசிக்கப்பட்ட மறையுரை தொகுப்பு 'Homiliae in vangelia". இந்த மறையுரை தொகுப்பில் மூன்று வகையான மறைச்சாட்சியம் பற்றியும் அதற்கென தனி வண்ணங்களைக் கொடுத்தும், எளிய முறையில் கிறிஸ்துவின் மறைச்சாட்சிகளாக நம்மை மாற்றிக்கொள்ள வழி கூறுகிறார்.

### சிகப்பு நிற மறைச்சாட்சி:

சிகப்பு நிறம் இரத்தத்தின் வண்ணத்தைக் குறிக்கும். கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொண்டு இறக்கும்வரையிலும் அந்த நம்பிக்கையில் நிலைத்து நின்றார்கள். அன்று விதையாய் மண்ணில் புதைப்பட்ட ஒவ்வொரு மறைச்சாட்சியும் இன்று வீறுமிக்க விருட்சமாய், கிறிஸ்துவின் பெயர் சொல்லி திருஅவையைத் தாங்கும் நம்பிக்கை தூண்களாக விளங்குகிறார்கள்.

### வெள்ளை நிற மறைச்சாட்சி:

கிறிஸ்துவுக்காக தங்கள் வாழ்வில் பெற்றிருந்த பணம், பதவி, கௌரவம், ஆசைகள் என அனைத்தையும் துறந்து இறைவனின் ஆட்சியை நிலைநாட்ட தங்களை வெறுமையாக்கிக் கிறிஸ்துவின் தூய்மையில் தங்களைத் துவட்டிக்கொண்டவர்கள். இந்த வெள்ளை நிற மறைச்சாட்சியில் பங்குகொள்ள பெரிய விதிகள் ஒன்றும் இல்லை, நீங்களும் நானும் கூட இருக்கலாம். இந்த மறைச்சாட்சியத்தில் துறவிகளும், குருக்களும் அடங்குவர்.

### பச்சை நிற (அ) நீல நிற மறை சாட்சி:

கடின உழைப்பாலும், நோயினாலும், வேதனைகளாலும் பாதிக்கப்பட்டு தங்களைச் சிலுவையில் உள்ள கிறிஸ்துவோடு இணைத்துக்கொண்டுத், தங்களுடைய மனமாற்றத்திற்காகவும், பிறருடைய மனமாற்றத்திற்காகவும் ஜெப தப வாழ்வில் தங்களைப் பிணைத்துக் கொள்பவர்கள்தான் பச்சை நிற மறைச்சாட்சிகள்.

அன்பு சகோதரமே இந்த மூன்று மறைச்சாட்சிய வாழ்வில் எது நம் வழி என இறைவனை வேண்டி நம் மனிதத்தில் மறைந்திருக்கும் புனிதத்தைத் தேடுவோம். அந்த மனிதம் நம்மை புனிதர்களாகவும், மறைச்சாட்சிகளாகவும் மாற்றும் என்பதில் நம்பிக்கை கொள்வோம்.





# கரப்பான் பூச்சி காதல்

அருட்பணி ஜெயசீலன் சவரியார்பிச்சை ச.ச.

சுந்தர் பிச்சை அனைவருக்கும் தெரிந்த முகம். கூகுள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி. அவருடைய கரப்பான் பூச்சி கோட்பாடு என்னை வெகுவாக கவர்ந்தது. ஒரு நாள் அவர் உணவகம் ஒன்றில் உணவு உண்டுகொண்டிருந்தார். பக்கத்து மேசையில் மூன்று இளம் பெண்கள். சிரித்த முகங்களோடு தங்களது சில்லறைத்தனங்களால் பலர் சிந்தனைகளில் சீறிப்பாய்ந்துகொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்களில் ஒரு பெண் சிணுங்க ஆரம்பித்தாள். சீராகச் சென்ற நிகழ்வு சிறிது நேரத்தில் சிக்கலாயிற்று. கரப்பான் பூச்சி ஒன்று அவளது கையில் அமர,அரக்கன் அண்டத்தையே அழித்தாற்போல் அரங்கத்தையே அலறவிட்டாள். பயத்தில் குதித்தாள் கூச்சலிட்டாள் நடுநடுங்கும் குரலுடன் குறுகுறுத்தாள். இறுதியில் ஒரு வழியாக பூச்சியைத் தட்டிவிட்டாள். சிறிது சலனமற்ற அமைதி ஆனால் அது அருகில் இருந்த அடுத்த பெண்ணிடம் ஒட்டிக்கொள்ள அதே காட்சிகள் மீண்டும் அரங்கேறின. கூச்சல் குறுகுறுப்பு குந்துதல் கும்மாளம் குமுறுதல் குழப்பம் அனைத்தும் அவள் வசம். இறுதியில் அவளும் அதைத் தட்டிவிட கூச்சல் கேட்டு தலைதெறிக்க ஓடி வந்த பணியாளர் மேல் அமர்ந்தது கரப்பான் பூச்சி. இப்போது அந்த காட்சிகள் மாறின. அவனிடத்தில் கூச்சல் இல்லை குழப்பம் இல்லை குறுகுறுப்பும் இல்லை. கரப்பான் பூச்சியின் நகர்வை கூர்ந்து கவனித்தான். அதன் ஓட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டான். தகுந்த நேரத்தில் அதை கவ்விப் பிடித்தான் பிடித்தவன் பயமில்லாமல் பதட்டமில்லாமல் பாசாங்கு காட்டாமல் ஜன்னல் வழியாக அதை எறிந்துவிட்டான். மீண்டும் காட்சிகள் மாறின அமைதிமயமானது அந்த உணவகம். ஆனால் அமைதியை மறுத்தது சுந்தர் பிச்சையின் மனம். இளம் பெண்களின் பதட்டத்திற்கு காரணம் கரப்பான் பூச்சியா? அப்படியென்றால் பணியாளர் ஏன் பதட்டப்படவில்லை? சிந்தனை அவரைச் சிறைசெய்தது இறுதியில் தெளிந்தார், உணர்ந்தார். ஆளுமையின்மைதான் காரணம் என்றார். வாழ்க்கை நகர்வுகளை நன்கு அறிந்தவன் தன் உள்ளத்து உணர்வுகளை உணர்ந்தவன் அதன் ஓட்டங்களை ஆற்றுப்படுத்துபவன் கரப்பான் பூச்சி மேல் காதல் கொண்டவன்.

கரப்பான் பூச்சி நமது வாழ்க்கையில் வரும் வாழ்வியல் துன்பங்களை அடையாளப்படுத்துகிறது. மகிழ்ச்சியாக இருக்கும்போது துன்பங்கள் பறந்துவந்து ஒட்டிக்கொள்வதும், சீராகச் சென்ற வாழ்வை துன்பங்கள் சிதறடிப்பதும் நிஜம். துன்பங்களை துயரங்களை பிரச்சனைகளை விரும்பாதவர்கள் இன்று அதிகம். விரும்புகிறோமோ இல்லையோ அவை நமது வாழ்வின் இன்றியமையாத அங்கங்கள் என்றுமே தவிர்க்க முடியாதவை. துன்பம் இல்லா வாழ்க்கை தூசு வாழ்க்கை அது வாழ்க்கையே இல்லை என்றுதான் நான் சொல்வேன். துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல் அவைகளை எதிர்கொண்டு மீண்டு வருபவன் இரும்பு மனிதன் ஆகிறான். துன்பம் இல்லாமல் வாழ நினைப்பவர்களுக்கு வாழ்க்கை ஒரு ஏமாற்றமே. இன்ப மனிதன் துன்பத்தை நோக்கிய பயணத்தையும் துன்ப மனிதன் இன்பத்தை நோக்கிய பயணத்தையும் என்றும் எதிர்நோக்கி இருப்பதுதான் வாழ்க்கையின் தத்துவம்.

துன்பம் இல்லா ஒருவனை நீங்கள் காட்டிவிட முடியுமா? துன்பமும் இன்பமும் இணைந்ததுதான் வாழ்க்கை. கடலின் அழகு அதன் அலைகளில். அலைகள் மேலே எழுவதும் பின்பு கீழே இறங்குவதும் அதன்பிறகு வீறுகொண்டு எழுவதும் வாழ்க்கையின் இயற்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. எழுவதும் விழுவதும் பிறகு வீறுகொண்டு எழுவதும்தான் நமது வாழ்க்கை ஓட்டம். ஏற்றமும் இறக்கமும் இணைந்ததே ஏறுமுகம். ஒருதலைக் காதல் கடைசிவரை கனவுக் காதலாகவே இருந்துவிடும். அது சிந்தனைக்கு சிறப்பு ஆனால் சிந்திப்பதற்கு சிந்தனையை செயலாக்கம் செய்வதற்கு கடினம். மற்றொருவனிடம் பேசிக்கொண்டிருக்கும்போதுதான் தெரிகிறது நமது பிரச்சனைகள் குன்றுபோலும் மற்றவனின் பிரச்சனைகள் மலைபோலும் இருக்கிறது என்று. ஆக பிரச்சனைகள் இல்லா மனிதனும் இல்லை பிரச்சனைகள் இல்லாமல் முடிவுகளும் இல்லை. பிரச்சனைகளுக்குப் பிறகு வரும் முடிவுகள் பேரமைதியைக் கொண்டுவரும் என்பதில் சந்தேகமுமில்லை. ஆக துன்பங்களை பிரச்சனைகளை காதலிக்கப் பழகிக்கொள்ளும் நேரம் இது. பிரச்சனை அலைகளில் மூழ்கிவிட அல்ல மாறாக அதிலிருந்து வீறுகொண்டு எழ.

கரப்பான் பூச்சிக் காதல், பிரச்சனைகளை நம் வசம் கொண்டுவருவது அதன் நகர்வுகளை ஆய்ந்து அறிவது பின்பு திட்டங்களைத் தீட்டி எதிர்நீச்சல் அடித்து அதிலிருந்து வெளிவருவது என்னும் உயர் காதலைச் சுட்டுகிறது. சுருங்கச் சொல்லின் பிரச்சனைகளை ஆளுமை செய்வது ஆற்றுப்படுத்துவது இதன் தலையாய காதல் பாட்டு. பிரச்சனைகளை உணர்வுப்பூர்வமாக சந்திக்கும்போது எதிர்கொள்ளும்போது நாம் உணர்வுகளில் உறைந்து விடுவோம். மாறாக உணர்வோடு சிறிது அறிவையும் நிதானத்தையும் பயன்படுத்தும் போது பிரச்சனைகள் நம் வசம். ஆக துன்பங்களை துயரங்களை பிரச்சனைகளை காதல் செய்வோம். இது தன்னை இழப்பதற்கு அல்ல மாறாக ஆளுமை செய்ய, ஆற்றுப்படுத்த!



திருமதி ரீட்டா



# சாட்சியமா சந்தேகமா?

தக்கன செய்வதையே ஞானியின் உள்ளம் நாடும் (சபை.உ:10:2) ஜுலை மாதம் என்றாலே கத்தோலிக்க திரு அவையில் புனித தோமையாரின் நினைவு பலருக்கும் பற்பல பாடங்களை நினைவூட்டும். இந்நினைவலைகளின் ஒரு பரிமாணமே இக்கட்டுரை. ஏன்? என்ற கேள்வி இங்கு கேட்காமல் வாழ்க்கையில்லை. ஆம்! ஏன்? எதற்கு? எங்கு? எப்படி? எதனால்? இதுபோன்ற கேள்விக்குறிகள் எப்போது எழுகிறதோ அப்போதுதான் விடைகள் கிடைக்கிறது. விடைகள் கிடைக்கிறதோ இல்லையோ விடுதலை கிடைக்கிறது. விடுதலை என்பது நம்மை விழிப்புணர்வு நிலையில் வாழச் செய்கிறது. இப்படியான விழிப்புணர்வை பெறுவதற்கும் உண்மையான விடுதலை வாழ்வை சுவைப்பதற்கும் நமக்கு வழிகாட்டியவர் புனித தோமையார். இவர் இயேசுவின் பன்னிரு சீடர்களுள் ஒருவர். இந்தியாவிற்கு இயேசுவைப் பற்றி அறிவிக்க வந்த திருத்தூதர். மறைப்பரப்பு பணியை சிரம்மேல் கொண்டு செயல்பட்டு கிறித்தவம் மண்ணில் தழைக்க இரத்தம் சிந்தி உயிர் துறந்தார்.

## தூய தோமாவின் சிறப்பம்சங்கள்:

புனித தோமையார் கி.பி முதல் நூற்றாண்டில் கலிலேயாவில் பிறந்தவர். தொடக்கத்தில் தச்சுத் தொழிலை செய்துவந்ததோடு மீன்பிடிக்கும் தொழிலும் செய்து வந்தார்.அவரின் 29-ம் வயதில் திருத்தூதர் பிலிப்பு மூலம் இயேசுவுக்கு அறிமுகமாகி இயேசுவின் சீடரானார். திதிம் என்னும் தோமா என்று அழைக்கப்பட்டார். கல்வியறிவு பெறாதவர், கபடு இல்லாதவர் இயேசுவை அதிகம் நேசித்தவர், இந்தியா இலங்கை பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் கண்பார்வையற்றோர், கல் உடைப்போர், இறையியல் வல்லுநர், கட்டடம் கட்டுவோர், ஆகியோருக்குப் பாதுகாவலர். யூதருக்கு அஞ்சாதவர், சந்தேகப் பேர்வழி என்று பெயர் பெற்றவர். ஆனால் இறைச்சாட்சியாக மறைச்சாட்சியாக மரித்தவர் உயிர்த்தெழுந்த இயேசுவோடு உணவு உண்ட ஏழு சீடர்களுள் தோமாவும் ஒருவர் திருத்தூதர்கள் யார் யார்? எங்கெங்கு சென்று இயேசுவின் நற்செய்திப் பணியைப் போதிக்க வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுத்தவர் இவர் குறித்த குறிப்புகளை வரலாற்று உண்மைகளை நற்செய்திபணி செய்த இடங்களை தோமாவின் பணிகள் என்ற நூலின் மூலம் அறிந்து கொள்கிறோம்.

## தூய தோமையாரின் நற்செய்திப்பணி:

பார்த்தியாவிலிருந்து தொடங்கிய திருத்தூதர் தோமாவின் நற்செய்திப்பணி மேதியா - பெர்ஷியா - இக்கோனியா - இந்தியா - சீனா - பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் - பள்ளூர் - முசிறிஸ் - பளூர் - கோட்ட - மங்கலம் - காயல் - நிர்ணம் - மலபார் - கொல்லம் -

திருவிதாங்கோடு - தமிழகம் எனப் பல்வேறு பகுதிகளில் கிறித்தவம் தழைக்க அடிநாதமாக இருந்திருக்கிறது. கிறிஸ்து இயேசுவை உலகறியச் செய்திருக்கிறது.

இலாசர் வியாதியாய் இருந்த போது இயேசு யூதேயாவுக்கு செல்ல விரும்பி **யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள்** என்றார். யூதர்கள் இயேசுவை கல்லால் எறிந்து கொல்ல நினைப்பதை அறிந்த சீடர்களில் பலர் இயேசுவோடு அங்குச் செல்ல விரும்பவில்லை. அந்தச் சூழலில் தோமா மட்டும்தான் யூதர்களுக்கு அஞ்சாமல் இயேசுவோடு செல்ல உறுதியெடுத்து **நாமும் செல்வோம் அவரோடு இறப்போம்** என்று சொல்லி மற்ற சீடர்களுக்கும் உற்சாகம் தந்து உடன் அழைத்துச் சென்றார். (யோவான் 11:7-16). இயேசுவோடு இருப்பதற்கும் இயேசுவோடு இறப்பதற்கும் அஞ்சாத்தன்மை உடையவராகவே தோமா இருந்திருக்கிறார்.

மற்றொரு முறை இயேசு சீடர்களிடம் **நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்து பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்** என்று கூறினார். அவ்வார்த்தைகளைக் கேட்ட தோமையார் மற்ற சீடர்களைப் போல் அமைதியாக இல்லாமல் துணிந்து **ஆண்டவரே! நீர் செல்லும் இடமே எங்களுக்குத் தெரியாதிருக்க அங்கே போகும் வழி எப்படி தெரியும்?** என்று கேட்டார். அதற்கு இயேசு **நானே வழியும் உண்மையும் உயிரும்** என்றார். (யோவான்:14:1-6) இந்நிகழ்வுகளிலிருந்தெல்லாம் தெரிகிறது தோமையார் இயல்பிலேயே துணிச்சல் மிகுந்தவர் யாருக்கும் எதற்கும் பயப்படாதவர் எல்லாவற்றிலும் ஒரு தெளிந்த அறிவைப் பெறுவதில் ஆர்வம் உள்ளவர் என்பது. ஆக இயேசுவிடம் தோமா இப்படி ஒரு கேள்வியைக் கேட்டதன் பயனாகவே ஆண்டவர் இயேசுவும் தாம் யார் என்பதை பகிரங்கமாகத் தெளிவுபடுத்தினார். இந்நிகழ்விலும் தோமாவின் சொற்கள் சாட்சியம் கூறுவதாகவே இருந்துள்ளதை அறிந்து கொள்கிறோம். நாமும் ஆண்டவருடன் சென்று அவரோடு சாகவேண்டியிருந்தாலும் தயாராய் இருப்போம் என்ற தோமாவின் கூற்று இயேசுவிடம் அவர் கொண்டிருந்த தனிப் பற்றுதலையும் நம்பிக்கையின் திறவுகோலாகக் களம் இறங்கி வழிகாட்டிய மேன்மையும் தொடக்கத்திலிருந்தே அவர் இயேசுவின் சாட்சியாகவே வாழ்ந்திருக்கிறார் என்பதும் புலனாகின்றது.

அதேபோல் இயேசுவின் உயிர்ப்புக்குப் பின்னும் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று கூறிய ஆண்டவரின் கட்டளைக்கு இணங்கி நற்செய்தி போதிப்பதை தன் வாழ்வாக்கிக் கொண்டவர் தூய தோமையார் சந்தேகம் பெரும் சங்கடங்களை விளைவித்தாலும தோமாவைப் பொருத்தமட்டில் அது சத்திய வேதத்திற்கான சாட்சியம் தான். தாமஸ் அப்படீன்னு யாராவது அவுங்க பேர சொன்னாலே ஓ! சந்தேகத் தோமாவா? எதையும் கொஞ்சத்துல நம்பமாட்டீங்க போல இருக்கே? என்று கேட்கும் அளவிற்கு தோமையாரை சந்தேகப் பேர்வழி என்று முத்திரைக் குத்தி அவருடைய துணிவு மிகுந்த வாழ்வியலுக்கு முரண்பாட்டைக் கற்பிக்கின்றவர்கள் பலர் இருக்கிறோம். ஆனால் கண்ணால் காண்பதும் பொய் காதல் கேட்பதும் பொய் தீரவிசாரிப்பதே மெய் என்ற கூற்றுக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாக தோமா இருந்திருக்கிறார் என்றே சொல்லலாம்.

### என் ஆண்டவரே! என் தேவனே!

இயேசு உயிர்த்தெழுந்தபின் சீடர்களுக்குக் காட்சி தருகிறார் அந்நேரம் தோமையார் அங்கு இல்லை. அங்கு ஏன் இல்லை? இங்குதான் நாம் சற்று யோசிக்க வேண்டும். கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவேன் என்று சொல்லியிருந்தார். எனவே அவர் உயிர்த்தெழுவதைத் தடுக்க யாரேனும் அவர் உடலைத் தூக்கிச் சென்று விடுவார்களோ? அல்லது உயிர்த்த ஆண்டவரை எங்கே தங்க வைக்கலாம்? ஆண்டவர் உயிர்த்து வரும்போது அவருக்கு எப்படி உதவியாய் இருப்பது என்பது போன்ற எண்ண அலைகளுடன் மற்ற சீடர்களைப் போல் பயந்து அறையில் முடங்கிக் கொள்ளாமல் பல இடங்களில் அலைந்து திரிந்திருக்கலாம். அப்படியாக இவர் வெளியில் சுற்றித்திரிந்து சீடர்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்தபோது நாங்கள் உயிர்த்த இயேசுவைக் கண்டோம் என்று சீடர்கள் சொன்னர்கள். இதை தோமாவால் ஏற்கமுடியவில்லை. நான் இவ்வளவு நேரம் எங்கெல்லாமோ அலைந்து திரிந்து அவர் உயிர்த்துவிட்டாரா என்பதை தெரிந்து கொள்ள பல முயற்சிகள் செய்துவிட்டு வருகிறேன். நீங்கள் எல்லாம் அறைக்குள் ஒளிந்து கொண்டு ஆண்டவரைக் கண்டோம் என்று சொல்லுகிறீர்களே! இது எப்படி சாத்தியமாகும் நான் நம்பமாட்டேன் என் ஆண்டவரின் கைகளில் ஆணிகளால் உண்டான காயங்களைப் பார்த்து அதில் என் விரலைவிட்டும் ஈட்டியால் குத்தப்பட்ட அவர் விலாவில் என் கையை விட்டால் ஒழிய நம்பமாட்டேன் என்று உயிர்த்த

இயேசுவைப் பார்க்காமல் விட்டுவிட்டோமே என்ற ஆதங்கத்தில் ஏக்கப் பெருமூச்சில் சீடர்களைப் பார்த்து இவ்வாறு சொல்லிக் கொண்டிருந்த போதே உயிர்த்த ஆண்டவர் மீண்டுமாக அங்கு தோன்றி தோமாவின் உள்ளத் தேடலை உணர்ந்தவராய் தோமா இதோ ஆணிகள் துளைத்த என் கரங்கள் உன் விரலை இடு உன் கையை நீட்டி என் விலாவினைத் தொட்டுப்பார். விசுவாசம் அற்றவனாய் இராதே! இதோ நீ அன்பு செய்யும் உன் ஆண்டவர் நான் உயிர்த்து விட்டேன்! என் ஆன்ம ஆவலைப் பூர்த்தி செய்து கொள் **வா தோமா வா!** என்று அழைக்கின்றார். தன் உள்ளத்தின் தேடலை ஆண்டவர் புரிந்து கொண்ட தன்மையை உணர்ந்த தோமா எதுவும் செய்ய இயலாதவராய் உரத்தக் குரலில் ஆண்டவரை நோக்கி ஓடி ஆனந்த கண்ணீர் மல்க என் ஆண்டவரே! என் தேவனே! என்று அறிக்கையிட்டு உயிர்த்த ஆண்டவரை அங்கிருந்தவர்க்கெல்லாம் அறிவித்து மகிழ்ந்தார்.



தேடல் உள்ள வாழ்வில் தான் சுகம் பிறக்கும் என்று சொல்வார்கள். அதுபோல தோமையார் ஆண்டவரை ஆவலுடன் தேடியதன் காரணமாகத்தான் ஆண்டவரும் அவரைத் தேடிவந்தார். மேலும் அவர் அன்று அறிக்கையிட்ட சத்தியவாக்கே இன்றளவும் திருஅவையால் அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொரு திருப்பலியிலும் எழுந்தேற்றத்தின்போது அப்ப வடிவில் உயர்த்தப்படும் ஆண்டவரைப் பார்த்து மனதார என் ஆண்டவரே! என் தேவனே! என்று நாம் ஒவ்வொருவரும் சொல்லி மகிழ்கிறோம். எந்நிலையிலும் ஆழமான உணர்வுப்பூர்வமான அனுபவத்தைப் பெறச் செய்யும் அவ்வார்த்தைகளை சொல்லி ஜெபிக்க அறிக்கையிட பழக்கப்படுத்தப் பட்டுள்ளோம். இந்த ஒரு நிகழ்வே போதுமானது. தோமையார் தன் இறையனுபவத்தை நமக்குள்ளும் விதைத்து விசுவாசத்தில் திடப்படுத்தி இன்றளவும் வழிநடத்துகின்றார்

தூய தோமையாரின் சாட்சிய வாழ்வுக்கான ஆதாரங்கள்:

- காளிகோயில் பூசாரியால் கொலை செய்யப்பட்டபோது அவரே செதுக்கிய சிலுவையை அரவணைத்தபடி உயிர்துறந்ததால் பெரியமலைக்கு புனித தோமாவின் கல்வாரி என்ற பெயர் இன்றளவும் வழங்கப்படுகிறது.
- சாந்தோம் பகுதியில் அன்று அவர் கட்டிய ஆலயம் தோமாவின் மூன்றாவது நினைவிடமாக உள்ளது. கல்லறையும் இங்குதான் உள்ளது.
- சாதி மத பாகுபாடின்றி அனைவரும் இந்த சாந்தோம் கதீட்ரல் பேராலயத்தில் கூடி ஜெபித்து தோமாவிடம் வேண்டுதல்களை வைத்து வரங்களையும் பெற்றுச் செல்கின்றனர்.
- கி.பி1972-ம் ஆண்டு திருத்தூதர் தோமாவை சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசானது தபால்தலை வெளியிட்டது.
- தோமாவின் நினைவாக சென்னை சின்னமலையில் போர்த்துகீசியர் கட்டிய ஆலயம் ஒன்று இன்றளவும் சான்று பகர்கிறது.
- திருத்தூதர் தோமா நீர்ச்சுனை தோமையாரின் நினைவு

பெரியமலை செயின்ட் தாமஸ் மவுண்ட் ஆலயம் இவ்வாலயத்தில் காணப்படும் கற்சிலுவை கி.பி2011-ல் இங்குள்ள ஆலயம் இந்தியாவின் மைய அரசால் தேசியத் திருத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக தோமையாரின் இரத்தம்தான் இந்திய மண்ணிலும் உலகின் பல்வேறுப் பகுதிகளிலும் கிறித்தவம் தழைக்க விசுவாசத்தின் விதையாக விதைக்கப்பட்டுள்ளது. எனலாம்.

வாழ்க தூய தோமையாரே – மறை
சாட்சிய உலகின் ஊன்றுகோலே!
திருச்சிலுவையை அரவணைத்து-உயிர்
துறந்த திருத்தூதரே!
நற்செய்திப் பணிவாழ்வின் நம்பிக்கை நங்கூரம் நீர்!
சந்தேகம் என்ற பெயரில்
சங்கடங்கள் தொலைத்தவர் நீர்!
கல்வாரி நாயகனைக் கண்டு தெளிந்த ஞானம் நீர்!
உயிர்த்த ஆண்டவர் உறவை
அகம்புறமென சுவைத்தவர் நீர்!
கல்வாரி காயத் தழும்புகளால்
உறுதியும் உரமும் பெற்றவர் நீர்!
என் ஆண்டவரே என் தேவனே எனும் சாட்சியம்
பகரும் அருள் பாடம் கற்பித்தீர்! இம்மறைபொருள்
வாக்குமூலம் ஒன்றே இன்று வரை ஒலிக்கும்
விசுவாசத்தின் அடிநாதம்!
ஆம்! அதுவே நம் மகிழ்வின் வேதம்!



திருமதி ஜாய்சி ஜோசப்

# இடறும் கவனமும் தொடரும் அவலமும்

எல்லா நாட்களையும் போல இருக்கவில்லை 2023ஆம் ஆண்டின் ஜூன் மாதம் மூன்றாம் நாள். இந்திய நாட்டின் வல்லரசு கனவை ஒரு நிமிடம் அசைத்துப் பார்த்தது அந்த இரயில் விபத்து. கொல்கத்தா நகரிலிருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் இரயில் ஒடிசாவின் பலசோர் மாவட்டத்தில் விபத்துக்குள்ளானது. ஒரு சரக்கு இரயில் மீது மோதியதால் தடம் மாறிய இரயில் பெட்டிகள் புரண்டு மரணக்குரல்கள் எழுப்பின. இதில் யாருடைய கவனக்குறைவால் இவ்விபத்து ஏற்பட்டது என்று சிந்திக்கத் தொடங்குமுன் அடுத்த விபத்து ஏற்பட்டது தான் மரணங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தின என்று கூறுவது எந்த அளவிலும் மிகையாகாது. விபத்துக்குள்ளாகி தடம் புரண்டு கிடந்த இரயில் பெட்டிகள் மீது ஹௌரா விரைவுஇரயில் வண்டி அதிவேகமாக வந்து மோதியதால் ஏற்பட்ட சேதம் எண்ணிலடங்காது போனது. ஏறக்குறைய ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். ஏறக்குறைய 300 உயிர்கள் அங்கே பறிபோனது என செய்தித்தாள்கள் கூறுகின்றன. எங்கு பார்த்தாலும் கை கால் சிதறிக்கிடந்தன என விபத்தின் போது அந்த இடத்தில் இருந்த ஒரு நபர் நேர்காணலின் போது கூறினார். விபத்துக்குள்ளான ஒரு இரயில் பற்றிய செய்தி அத்தடம் வழியே வரும் அனைத்து வண்டிகளுக்கும் அதனை உள்ளடக்கிய இரயில் நிலையங்களுக்கும் அறிவித்து மேலும் அத்தடத்தினில் வண்டிகள் வராத வண்ணம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிலைய அதிகாரிகளும் பணியாளர்களும் அந்நேரத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது தான் எல்லோராலும் கேட்கப்படுகின்ற ஒரு கேள்வி. ஒரு மெத்தனம் அல்லது ஒரு கவனக்குறைவின் விலை 300 உயிர்கள்.

இது ஒரு புறமிருக்க விபத்திற்கு பிறகு நடந்த மீட்புப்பணிகளிலும் மெத்தனமும் கவனக்குறைவுமே நீடித்தது. அந்த இரயில் விபத்திலே மரணித்தவர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி உறவினர்கள் வந்து கோரும் வரை அருகிலிருந்த ஒரு பள்ளிக் கட்டிடத்தில் தற்காலிகமாக வைத்தார்கள். கோரமண்டல் இரயிலில் பயணித்த இளைஞன் ஒருவனும் விபத்திற்குள்ளான். அந்த இளைஞனுடைய தந்தை இரயில் விபத்தைப் பற்றி கேட்டவுடன் தன் மகனை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாமல் போனதால் விபத்து நடந்த இடத்திற்கே தன் மகனைத் தேடி ஒரு தனியார் அவசரஊர்தியுடன் வந்து சேர்ந்தார். விபத்துநடந்த இடத்தில் எங்கும் மகனை காணாததால் கனத்த இதயத்துடன் தன் மகன் இறந்திருப்பான் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு அந்தப் பள்ளியை நோக்கிச் சென்றார். அங்கே இறந்தவர்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடையே தேடினார் தன் மகனை. ஒரு மூலையில் சுவரோரமாய் கிடத்தியிருந்த தன் மகனை ஆரத்தழுவிய பொழுது அவருக்கு காத்திருந்தது ஒரு நற்செய்தி. அவரது மகன் இறந்திருக்கவில்லை. விபத்தினால் காயமடைந்து நினைவின்றி கிடந்தவனை இறந்தவன் என கணக்காக்கி அவனை அந்த பள்ளியினில் இறந்தவர்களிடையே கிடத்தியிருக்கிறார்கள். உயிரோடு இருக்கும் ஒரு நபரை இறந்தவராக மாற்றியது யாருடைய கவனக்குறைவு?

அங்கே மீட்புப்பணிக்கென ஏறக்குறைய முப்பது முதல் நாற்பது வரை மருத்துவர்கள் அங்கே பணியிலிருந்த பொழுதும் இறந்தவர் யார் உயிரோடு இருப்பவர் யார் என்று கண்டறிய முடியாமல் கவனக்குறைவாகவும் மெத்தனமாகவும் இருந்தது மிகவும் கவலைக்குரியது. இன்னும் எத்தனை பேர் இது போன்ற கவனக்குறைவால் தங்களது சுயநினைவின்றி மயக்கத்திலேயே உயிரிழந்தனர் என்று தெரியவில்லை. இது இன்று நம் கண்முன்னே நிகழ்ந்த ஒரு உதாரணம். தொழில்நுட்பம் அதிக அளவில் உள்ள இந்நிகழ்காலத்தில் நடந்த இந்நிகழ்வினைப் போல கடந்த காலங்களில் இதுபோன்ற கவனக்குறைவுகளால் எத்தனை ஆயிரம் மக்கள் தங்கள் உயிர்களை இழந்தார்கள் என்று தெரியவில்லை. இது போன்று இடறும் கவனத்தினால் மரணங்கள் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்.

இன்று எங்கு நோக்கினும் ஒரு கவனக்குறைவு இருக்கத்தான் செய்கிறது. பணியில்

கவனமின்மை, படிப்பில் கவனமின்மை, தொழிலில் கவனமின்மை, வருகின்ற காலத்திற்கு நாம் பாதுகாத்து வைக்கவேண்டிய இயற்கை குறித்து கவனமின்மை அதிகாரத்தில் மெத்தனம் மற்றும் கவனமின்மை பொறுப்பில் கவனமின்மை என இது போன்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஜூன் 3 அன்று எவ்வாறு இந்நாடு இரயில் மரணங்களால் குலுங்கியதோ அதே போல் மொத்த நாடும் திகைத்த ஒரு செய்தி ஜனவரி 28ஆம் நாள் 2004ஆம் ஆண்டு செய்திதாள்களை ஆக்கிரமித்தது. அன்றைய நாளில் நாட்டின் குடியரசு தலைவராயிருந்த பெருமைக்குரிய அப்துல் கலாம் அவர்களுக்கு எதிராக குஜராத் நீதிமன்றம் ஒன்று கைதாணை பிறப்பித்திருந்தது. குடியரசு தலைவரையும் மற்றும் நாட்டின் தலைமை நீதியரசரையும் கைது செய்யலாம் என வெறும் நாற்பதாயிரம் பணம் பெற்றுக் கொண்டு நீதிபதி ஒருவர் ஆணை பிறப்பித்திருந்தார். ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் தாம் யாருக்கு எதிராக கைதாணை பிறப்பிக்கிறோம் என அந்த நீதிபதிக்கே தெரியாததுதான். விஜய் சங்கர் என்கிற பத்திரிக்கையாளர் நம் நாட்டில் நடக்கும் அவலங்களை வெட்ட வெளிச்சமாக்க நடத்திய ஒரு நாடகத்தின் அங்கம் தான் அந்நீதிபதி பிடிபட்டது. கையூட்டு பெற்றுக்கொண்டு எதில் கையொப்பமிடுகிறோம் எனப் படிக்காமல் கவனக்குறைவாக அந்த நீதிபதி நடந்து கொண்டது நம் நாட்டின் நீதித்துறையின் மேல் பொதுமக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை கேள்விக்குறியாக்கியது.

சில காலத்துக்கு முன்பு சென்னை நகர சாலையில் நடந்த ஒரு துயரம் உண்டு. தனது படிப்புகளை நன்முறையில் முடித்து தகவல் தொழில்நுட்ப வல்லுநராய் தனது வாழ்க்கையை ஆரம்பித்த ஒரு 24 வயது பெண் சாலையிலேயே மாண்டு போன துயரத்தை செய்தித்தாள்கள் விவரித்தன. ஆர் சுபா என்கிற பெண் காலையிலேயே தனது வீட்டிலிருந்த பெற்றோரிடம் விடை பெற்றுக் கொண்டு ஆனந்தமாய் பணிக்குச் சென்றவள். மீண்டும் சிறிது நேரத்திலேயே பொட்டலமாய் தங்கள் இறந்த மகளின் உடலினை காண வேண்டி வரும் என சிறிதும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் அவளது பெற்றோர். சாலையில் முறையாக சென்று கொண்டிருந்தாள் அந்தப் பெண். அப்பொழுது எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு பதாகை அவள் மேல் விழுந்து அவளை விபத்துக்குள்ளாகியது. அந்தப் பதாகை அவளது உயிரை எடுத்தது. இது யாருடைய கவனக்குறைவு? அந்தப் பதாகையை வைத்தவரா? அல்லது அதை வைக்க அனுமதித்தவரா? அல்லது சாலையில் இவ்வாறு ஒரு பதாகை வைக்கின்றோம் அது பயணிகளுக்கு இடையூறாய் இருக்கும் என்று சிந்திக்காமல் அதை கவனக்குறைவோடு சரியாக கட்டாதவரா? இது யாருடைய கவனக்குறைவு?

மேலே இருப்பவர்களை மட்டும் குறை சொல்லி ஒரு பயனுமில்லை. நம் வாழ்க்கையில் நாம் எவ்வளவு தூரம் கவனக்குறைவாக இருக்கிறோம் என்று நாமும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எவ்வளவு எளிதாக நாம் நம்முடைய மிகமுக்கியமான காரியங்களை கடந்து செல்கிறோம். தேவையில்லாத காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறோம். சினிமா மற்றும் களியாட்டங்களுக்கு நாம் செலவிடும் நேரம் மற்ற நல்ல காரியங்களுக்கு செலவிடும் நேரத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிகம். இந்த சிந்தனையே நமக்கு அடுத்து வருபவருக்கும் விட்டுச் செல்கிறோம். இதுவும் நம் கவனக்குறைவுகளில் முதன்மை.

அறிஞர் அண்ணா சொன்னதாக ஒரு கூற்றினைச் சொல்வார்கள்: படிக்கும் பொழுது கவனத்தைச் சிதற விட்டு தேர்ச்சிபெறாத மாணவனைக் கேட்டுப்பார் ஒரு வருடத்தின் விலை தெரியும். கவனக்குறைவினால் பணியிழந்த மாத சம்பளத்தில் காலத்தை ஓட்டும் ஒரு தொழிலாளியிடம் கேட்டுப்பார் ஒரு மாதத்தின் விலை தெரியும். தேர்வின் தொடக்க நேரத்தில் கவனமின்றி மெத்தனமாய் இருந்து முடியும் தறுவாயில் அவசர அவசரமாய் எழுதும் ஒரு மாணவனிடம் கேட்டுப்பார் நிமிடங்களின் விலை தெரியும். சாலையில் கவனமின்றி வண்டி ஓட்டி விபத்தில் சிக்கியவனிடம் கேட்டுப்பார் ஒரு நொடியின் விலை தெரியும். ஓட்டப்பந்தயத்தில் ஆரம்பத்தில் மெத்தனமாய் ஓடி தங்கத்திற்கு பதிலாக வெள்ளிப்பதக்கத்தை வாங்கியவனிடம் கேட்டுப்பார் நுண்நொடிகளின் விலை தெரியும்.

கவனமின்மை ஒரு தீர்க்க முடியாத பிரச்சனை அல்ல. நம்மால் நாமே சரிசெய்ய முடிந்த ஒரு எளிய பிரச்சனை. ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் அரசியல்வாதியாகட்டும், அரசு அதிகாரத்தை செயல்படுத்தும் அதிகாரியாகட்டும் பேருந்து இரயில் விமானம் கப்பல் இவற்றை இயக்குபவர்களாகட்டும் சாலையில் வண்டி ஓட்டிச் செல்லும் சாதாரண பொது மக்களாகட்டும் அல்லது நடந்து செல்லும் நபர்களாகட்டும், படிக்கும் மாணவர்களாகட்டும் கற்பிக்கும் ஆசிரியர்களாகட்டும், பெரிய கட்டிடங்களைக் கட்டுவோராகட்டும், சிறிய குடிசைகளிலே வாழ்வோராகட்டும், இது போன்று எல்லாருக்கும் கவனம் தேவை. நம் கவனமின்மை நம்மோடு முடிவது கிடையாது. அது அடுத்தவரது வாழ்க்கையையும் பாதிக்கும் என்கிற அறிவு நம் எல்லோருக்கும் வர வேண்டும். நம் கவனம் இடறினால் அவலங்களே தொடரும்.



ரோனா ஆல்பர்ட்

# மலையிலிருந்து புறப்பட்ட அன்பு நதி

**இயல் 2**



மலை பகுதியிலிருந்து புறப்படும் நதி அல்லது ஆறு என்பதன் விதிபோலவேதான் குருத்துவத்துக்கான விதியும் பொருந்தியிருக்கிறது. இயற்கையாகச் செல்லும் நல்ல நீரைக் கொண்ட ஒரு பெரிய நீரோட்டமான ஆறு இருபுறமும் கரைகள் என்னும் நிலப்பகுதிக்கு உட்பட்டு ஓடி மற்றொரு ஆற்றிலோ, ஏரியிலோ அல்லது கடலிலோ இணைகின்றது. குருத்துவ நிலைப்பாடும் விசுவாசமும் துறவுமாகிய இரு ஒழுங்குகளுக்குள் உள்ளாகி இறைவனில் இணைவதற்கு இது பொருத்தமாகிறது. ஆற்றின் நீரோட்டம் புவியீர்ப்பு விசையின் காரணமாக ஏற்படுகிறது என்றால் குருத்துவப் பணிவாழ்வுக்கு இறையீர்ப்பு விசையே காரணமாகிறது.

சில வேளைகளில் ஆறுகள் இன்னொரு நீர் நிலையை அடையும் முன்னே நிலத்துக்குள் உறிஞ்சப்படுவதோ அல்லது வறண்ட பகுதிகளில் ஆற்று நீர் ஆவியாதன் மூலம் வறண்டு விடுவதோ உண்டு. சில ஆறுகள் மண்ணுக்கு ஊடாகவோ, இடையே செல்லவிடும் பாறைகளுக்கு ஊடாகவோ நிலத்துக்குள் உறிஞ்சப்படுவது உண்டு. இது நிலத்தடி நீராகத் தங்கி விடுகிறது. இவ்விதமே குருத்துவ நிலைப்பாட்டை அடையும் முன்னமே தடுமாற வைக்கும் சோதனைகளும், திசை திருப்பும் தடங்கல்களும் ஏற்படுகையில் தடைகளைத் தாண்டி குருமாணவர்கள் பெரும் நீரோட்டமான நதி கடலில் கலப்பதுபோல் இறைவனைத் தேடி அவரில் சங்கமிக்கிறார்கள். தனி மனித சோதனைகள், தடைகள் யாவும் குருமாணவர்களுக்கும் ஏற்படும் என்றாலும் லூயிஸ் குவனெ ல்லாவுக்கு அவர் காலத்தில் ஏற்பட்ட பிரச்சனை வேறாக இருந்தது.

ஆஸ்திரியா நாட்டிற்கு அடிமைப்பட்டிருந்த இத்தாலி நாடு பிரான்ஸ் நாட்டின் உதவியோடு விடுதலை அடைய போராடிக் கொண்டிருந்த காலம். மடங்களில் பயின்ற குருமாணவர்களுக்கு நாட்டுப்பற்று மிகுந்திருக்க கல்வி கற்கும் ஆசையைக் காட்டிலும் போரின் வெற்றியில் ஆவல் அதிகமிருந்தது. 1855-ஆம் ஆண்டு மே-20 அன்று சான்ஃபெர்மோ மலைமேலே குவனெல்லா கல்வி பயின்ற பள்ளிக்கு அருகாமையிலேயே இத்தாலியின் தந்தையர்கள் நாட்டின் தந்தையர்களில் ஒருவராக பின்னாளில் அழைக்கப்பெற்ற ஜோசப் கரிபால்டியின் புரட்சிப் படைகள் போரில் ஈடுபட்டன. அங்கு கிட்டிய வெற்றிகளைத் தொடர்ந்து குவனெல்லா பயின்ற பள்ளிக்கூடம் இராணுவத்தளமாக மாற்றப்பட, பிரான்ஸ் வீரர்களுக்கு மருத்துவமனையாகவும் மாறிற்று. பள்ளி மாணவர்கள் காலாட்படை வீரர்களைப் போன்று தலையில் தொப்பி அணிந்து அங்கு உதவிகள் புரிந்தனர். சிறுவன் குவனெல்லாவும் நாட்டுப்பற்றின் காரணமாக உதவிப் பணிகளில் ஈடுபட்டார்.

1860 நவம்பர் 4 அன்று சான் அப்போன்டியோ குருமடத்தில் மாணவராக குவனெல்லா இணைந்தார். அங்கே பக்தியிலும் ஞானத்திலும் வளர்ச்சியடைந்தார். தன்னைச் சுற்றியுள்ள மாணவர்கள் உள்ளங்களில் புரட்சி மனப்பான்மை கொழுந்துவிட்டு எரிய, தனக்குள்ளும் நாட்டுப்பற்றினால் உருவாகும் அரசியல் ஈர்ப்பை உணர்ந்தார். நாடு இருக்கும் இக்கட்டான நிலையில் தன்னைச் சுற்றி நடைபெறும் போராட்ட நிகழ்வுகளால் தன் குரு மாணவர் கனவும் திசை மாறிவிடுமோ என்று அஞ்சினாலும், தனக்குள் ஏற்பட்ட அரசியல்

தாக்கத்தினை இறையழைத்தலுக்கு எதிராக மாறாமல் பார்த்துக்கொண்டார். அவருடைய எண்ணத்தின் முழுமை, தான் ஒரு குருவானவராக ஆக வேண்டும் என்பதிலேயே சுழன்றது. நாட்டிலிருந்த அரசியல் தெளிவற்ற தன்மை, குழப்பமான சூழ்நிலைகள் குருமடத்திலும் அதிகரிக்க, குரு மாணவர்கள், கற்பிக்கும் குருக்கள் மத்தியில் அரசியல் சார்பு நிலை ஒருபுறமும், சமயச் சார்பு நிலை இன்னொரு புறமும் எதிரெதிர் கருத்துகளாக உருவாயின. இதனால் குருமடத்தில் பல்வேறு சிக்கல்களும், பிரச்சனைகளும் ஏற்பட்டன. இத்தகைய கருத்து வேறுபாடுகளைக் களைய குருமடத்தில் பத்திரிக்கை இதழ் ஒன்றைத் துவக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இருமுறை மாத இதழின் பொறுப்பாசிரியராக குவனெல்லாவிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. குருக்கள் மற்றும் மாணவர்களை சமயப் பற்று மாறாமல் புதிய கண்ணோட்டத்துடன் சிந்திக்கத் தூண்டும் வண்ணம் அவரும் எழுதினார். அவரது எழுத்துக்களில் திருச்சபை, திருத்தந்தை ஆகியோரின் சிந்தனைகளை தீர்க்கமாக வெளிப்படுத்தி, அரசியல் இயக்கங்களின் சமயம் சார்ந்த எதிர்மறை எண்ணங்களை முறியடித்தார். பின்னாளில் அவர் எழுத்துக்கள் அரசின் எதிர்ப்பை சம்பாதிக்கும் அளவுக்கு இருக்கும் என்பதை அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. இதற்கிடையே நீண்ட போர்கள், போராட்டங்களுக்குப் பின்னர் 1861-ஆம் ஆண்டு மார்ச் 17 அன்று இத்தாலி விடுதலை பெற்ற புதிய நாடாக அமைந்தது. 1862 அக்டோபர் மாதத்தில் குவனெல்லா இறையியல் கல்வி பயிலத் தொடங்கினார். கத்தோலிக்க சமயத்திலிருந்து பிரிந்துபோன சகோதரர்களை மீண்டும் தாய்ச்சபையில் இணைக்கும் வல்லமை பெற்றிருந்த குருவானவர் கௌதன்சியோ பியாங்கி என்பாரை தனது செப மற்றும் பணிவாழ்விற்கு மாதிரிகையாகக் கொண்டு அவரைத் தன் ஆன்ம குருவாக ஏற்றுக்கொண்டார்.

குவனெல்லாவின் காலத்தில் குருமாணவர்கள் வசதிகளற்ற நிலையில்தான் தங்கள் படிப்பைத் தொடர வேண்டியிருந்தது. படுக்கை அறையில்தான் படிக்க வேண்டிய நிலைமை இருந்தது. இரவு முழுதும் கண்விழித்து கவனமாகப் படிக்கும் வழக்கம் கொண்ட குவனெல்லா காற்றோட்டத்திற்காக சன்னல்ளைத் திறந்து வைத்துக்கொண்டு படிப்பதால் குளிர் ஒத்துக்கொள்ளாமல் அடிக்கடி உடல்நலக் குறைவும் தலைவலியும் ஏற்பட்டு அவதிப்பட்டார். குருமாணவர்கள் எவரிடம் போதிய உடைகள் இருப்பதில்லை, போதிய உணவும் வழங்கப்படுவதில்லை. மறைமாவட்டம் வழங்கும் சிறிய அளவு நிதியால் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய இயலவில்லை. மாலை நேர விளையாட்டுகளும் பொழுதுபோக்குகளுமே அவர்களுக்குள் மகிழ்ச்சியை உருவாக்கின. குறைபாடுகள், நெருக்கடிகள் மத்தியிலும் குருமாணவர்கள் பக்தியிலும், இறைநம்பிக்கையிலும், பணிவாழ்வின் ஆர்வத்திலும் மென்மேலும் வளர்வதற்கான நல்ல வாய்ப்புகளையும், சந்தர்ப்பங்களையும் அவர்களுக்குப் பயிற்றுவித்த குருக்கள் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். குருமட வாழ்வில் குவனெல்லாவும் பிறருக்கு உதவும் நற்பண்பையும், மனதைரியத்தையும் வளர்த்துக் கொண்டார். மறைப்பரப்பு நாடுகளில் மறைப்பணியாளராக பணி புரிவதையே தன் வாழ்வின் குறிக்கோளாகவும் கொண்டார்.

கீழ்த்திசை நாடுகளில் மறைப்பரப்பு பணி செய்து பல ஆன்மாக்களை கிறிஸ்தவ மறையில் இணைத்த அருட்தந்தை தொன் சுப்ரீஸ் என்பவர் பவியா நகரில் அமைந்திருந்த கர்த்தூசியன் சபைக்கு தலைவராக நியமிக்கப்பட, அவர் பல குருமடங்களைச் சந்தித்து மாணவர்களிடையே மறைப்பரப்பு பணிக்கான ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தார். ஏற்கனவே லோம்பார்டியா மாநிலத்தின் சரோன்னா நகரில் இயங்கிக் கொண்டிருந்த குருமடம் மறைச்சாட்சிகளாகும் பேற்றினை அடையும் ஆர்வத்தை இரத்தத்திலேயே கொண்ட பல குருமாணவர்களை உருவாக்கியிருந்தது. இந்நிலையில் குவனெல்லாவின் நண்பரும், இரண்டாண்டு சீனியர் மாணவருமான ஜியாம்பட்டிஸ்டா ஸ்கலபிரினி என்பவர் தம்முள் மறைப்பரப்பு பணி ஆர்வம் கொழுந்துவிட்டு எரிய அக்குருமடத்தில் சேர விருப்பம் கொண்டார். அதனை மறைமாவட்ட ஆயரிடம் தெரிவிக்கையில், அவரோ தனது மறைமாவட்டத்திற்கே அதிக அளவில் இறையழைத்தல் தேவைப்படும் நிலையில் சரோன்னா நகர் குருமடத்தில் சேர அனுமதி மறுத்தார்.

இதே நிலைதான் 1863-ஆம் ஆண்டு குவனெல்லாவுக்கும் நிகழ்ந்தது. பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளம் போல் தன் உள்ளத்தில் பொங்கியிருந்த மறைப்பரப்பு பணி ஆர்வத்தை ஆயரிடம் தெரிவித்து சரோன்னா நகர் குருமடத்தில் சேர அனுமதி கேட்டபோது. முதலில் இத்தாலிக்கே மறைப்பரப்பு பணி தேவைப்படுகிறது என்றும், இருக்கும் நிலையிலேயே கல்வியைத் தொடர வேண்டும் என்று ஆலோசனை கூறி ஒப்புதல் அளிக்க மறுத்தார். மனம் தளராத குவனெல்லா இறைவன் வகுத்த வழியில் முழுநம்பிக்கை வைத்தவராய் தன் கல்வியைத் தொடர்ந்தார்.

(நதி ஓடும்)



அருள்பணி பீட்டர்

# கிரிக்கெட்டும், மல்யுத்தமும், மக்களாட்சியும்

### மயக்கும் ஐ.பி.எல்

மதம் மக்களை மயக்கும் மது என்றான் மார்க்ஸ். இந்தியாவில் கிரிக்கெட். அதுவே மக்களை மயக்கும் மது. ஒட்டு மொத்தமாக விளையாட்டு, 'போதை தரும் மது' என்று சொல்லிவிட முடியாது. இந்தியாவில் மல்யுத்த வீரர்களால் இந்தப் போதையைத் தரமுடியவில்லை. இங்கே கபடியோ, கால்பந்தோ தராத மயக்கத்தை கிரிக்கெட் மட்டுமே தருகின்றது. நடந்து முடிந்த ஐ.பி.எல். அதைத்தான் உறுதிப்படுத்துகின்றது. 60 நாட்கள், 74 போட்டிகள். மார்ச் மாதம் 31 ஆம் தேதி தொடங்கி மே மாதம் 29 ஆம் தேதி வரை ஒவ்வொரு நாளும் இரவு 7 மணியிலிருந்து 11.00 மணி வரை கோடிக்கணக்கான மக்களை ஐ பி எல், தொலைக்காட்சி முன்பும், ஜியோசினிமா செயலியின் முன்பும் அமரச் செய்து செயலிழக்கச் செய்திருக்கிறது. அந்த நாட்களில் சுனாமியே வந்திருந்தாலும், சுனாமி நடக்காத இடத்தில் மேட்ச்சை வைத்துக் கொள்ளக் கூடாதா? என்றுதான் பேசிக் கொண்டிருந்திருப்போம். அந்த அளவிற்கு அது நம்மைக் கட்டிப் போட்டுவிட்டது.

### பழைய, புதிய கொலோசேயங்கள்

உண்மையான பிரச்சனைகளிலிருந்து மக்களை திசை திருப்பும் வேலைகளை விளையாட்டும் செய்துவிடுகிறது - சினிமாவைப் போல. ஆள்பவர்கள் எல்லாக் காலத்திலும் விளையாட்டுக்களை ஊக்குவித்திருக்கிறார்கள். உரோமை நகரில் கி.பி 72ம் ஆண்டு வெஸ்பியான் என்கிற அரசனால் தொடங்கப்பட்டு, கி.பி. 80 ல் அவரது மகனால் கட்டிமுடிக்கப்பட்ட கொலோசேயம் என்கிற மிகப்பெரும் விளையாட்டு வட்டரங்கம், இன்றைக்கு பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தாலும், பார்வையாளர்களைத் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டே இருக்கின்றது. அந்த விளையாட்டரங்கத்தில் 80000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதியைக் கொண்டிருந்தது. அதனுடைய தொடக்க விழா 100 நாட்கள் நடைபெற்றதாகவும், ஏறக்குறைய 9000 விலங்குகள் கொல்லப்பட்டதாகவும் வரலாற்றுக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. இதில் எத்தனை அடிமைகள் கொல்லப்பட்டார்கள் என்பது தெரியவில்லை. விலங்குகளை விட அடிமைகள் மேலான நிலையில் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.



எதற்காக அங்கே இவ்வளவு பெரிய கொலோசேயம்? மக்களின் பிரச்சனைகள் எல்லாம் முடிந்த பிறகு, வேறு ஒன்றும் இல்லாமல் பொழுதுபோக்கிற்காகக் கட்டப்பட்டதா? மக்களின் பிரச்சனைகளிலிருந்து அவர்களைத் திசை திருப்பும் வேலையைக் கனகச்சிதமாய்ச் செய்தது அந்த விளையாட்டரங்கம். 2000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கொலோசேயத்தின் நோக்கத்தை ஆள்பவர்கள் புரிந்து கொண்டார்கள். மக்களை மயக்கத்தில் வைக்கும் மது, விளையாட்டு என்பதைத் தெளிவாய் உணர்ந்தார்கள். சினிமாவை விட இன்னும் பவர்புல்லான போதை தரக்கூடியது என்பதை உணர்ந்து கொண்டார்கள். விளையாட்டுகள் மாறிப் போயிருக்கின்றன. ஆனால் வட்டரங்குகள் மாறவே இல்லை. அரசுகள் அதை ஊக்குவிக்கின்றன.

இன்றைக்கு இந்தியாவில் ஓரிடத்தில் அல்ல, மாறாக மிக முக்கியமான நகரங்களில் கொலோசேய வட்டரங்குகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதிலும் மிகக் குறிப்பாக, இறுதியாய் குஜராத்தில் கட்டப்பட்ட நரேந்திர மோடி வட்டரங்கம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை உள்ளடக்கும் ஆற்றல் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், வட்டரங்குகளுக்கு வரமுடியாதவர்களின் வசதிக்காக, கோலோசேயங்களின் நீட்சியாக, வீட்டிற்கே கொண்டு சேர்க்கும் நீள்சதுரப் பெட்டகங்களும், கையடக்கத் திறன்பேசிகளும் சேர்ந்து கொண்டு பார்வையாளர்களைக் கோடிக்கணக்கில் உயர்த்துகின்றது. இது என்ன வேலையைச் செய்யும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

### பத்திரிக்கைகள் விதிவிலக்கல்ல

கிரிக்கெட் வீரர்கள் விளம்பரங்களில் நடிக்க வைக்கப் படுகிறார்கள். அந்த வீரர்கள் ஸ்டேடியத்திற்குள் நுழையும் போது பார்வையாளர்கள் எழுப்பும் கோஷம், வீட்டினுள் இருக்கும் நம்மையே மயக்கத்தில் ஆழ்த்தி விடுகின்றது. தோனி என்கிற ஒற்றை வீரரை ஒட்டியே இந்த ஆண்டின் ஒற்றை போதைப் பொருள். அவர் நின்றால், நடந்தால், சிரித்தால், பார்த்தால், ஓடினால், அடித்தால், டக் அவுட் ஆனாலும் கூட அவ்வளவு ஆர்ப்பாட்டம். ஒரு மீடியா விடாமல் மஞ்சள் நிறக் குழுவைப் பற்றியே எழுதிக் கொண்டிருந்தன. இதில் என்ன தவறு இருக்கின்றது? என்று எண்ணத் தோன்றும். ஆனால் இதே பத்திரிக்கைகள் பிரச்சனைகளைப் பேசுவதில்லை. எப்போதும், தங்களது வியாபாரத்தை வளர்க்கும் போதைப் பொருள்களையே தங்களின் பத்திரிக்கைகளில் வெளியிடுகின்றன.

### மல்யுத்த வீரர்கள்

2023 ஜனவரி மாதம் 18 ஆம் தேதி தொடங்கி இன்று வரை மல்யுத்த வீராங்கனைகள் போராடிக் கொண்டிருக்கின்றனர். யாருக்காவது கேட்டதா? தங்களைப் பாலியல் ரீதியாக துன்புறுத்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவரும், பா.ஜ.க எம்.பி. யுமான பிரிஜ் பூஷனின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மல்யுத்த வீரங்கனைகள் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இந்தியாவிற்குக் கேட்கவில்லை. பத்திரிக்கைகள் செய்திகள் வெளியிடுவதில்லை. ஒன்றியப் பிரதமர், உள்துறை அமைச்சர் என்று யாரும் அதைப் பற்றி செய்தி ஒன்றுமே தெரிவிக்கவில்லை. ஆறாவது மாதமாக பல்வேறு வடிவங்களில் தங்களின் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் சாக்ஷி மல்லிக் இந்தியாவிற்காக ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். தனது பதக்கங்களை கங்கையில் தூக்கி வீசுவதற்காக வீட்டிலிருந்து வேதனையோடு அவர் எடுத்துக் கொண்டிருந்த பதக்கங்களை சில பத்திரிக்கைகள் வெளிக் கொணர்ந்தன. உலக சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்றிருக்கும் வினேஷ் போகட் என்கிற மற்போர் வீராங்கனையும் போராடுகின்றார். இவர்களோடு சேர்ந்து, ஆசிய விளையாட்டில் தங்கம் வென்ற பஜ்ரங் புனியா என்கிற மல்யுத்த வீரரும் அவர்களுக்காக சேர்ந்து போராடுகின்றார். ஆனால் இந்த வீரர்களால் அந்தக் கொலோசேயங்களின் சத்தத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

### புதிய நாடாளுமன்றமும் மக்கள் குரலும்

மே மாதம் 28 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று, இந்திய அரசியல் சாசனத்திற்கு எதிராகவும், இந்திய நாட்டின் இறையாண்மைக்கு எதிரானதாகவும், மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் விதத்திலும் இந்துத்துவக் கொள்கைகளை முன்னெடுத்த சவர்க்கார் அவர்களின் பிறந்த நாளன்று, இந்தியாவின் புதிய நாடாளுமன்றம் திறக்கப்பட்டது. இந்த நாடாளுமன்றம் திறக்கப்பட்ட அதே சமயத்தில் அங்கிருந்து 2 கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்தில் மல்யுத்த வீரர்கள், தங்களது கரங்களில் இந்திய தேசியக் கொடியை ஏந்தியவர்களாக நீதி வேண்டி போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான காவலர்களும், இராணுவ வீரர்களும் தேசத்துரோகிகளைச் சுற்றி வளைப்பது போன்று அவர்களை இடைமறித்து நின்றனர். ஏப்ரல் 23 ம் தேதி தொடங்கி நாடாளுமன்றம் திறக்கப்பட்ட அந்த நாள் வரை ஏறகுறைய 35 நாட்களாக அவர்கள் ஜந்தர் மந்தர் என்கிற பகுதியில் தங்கியிருந்து போராடிக்கொண்டிருந்தனர். நாடாளுமன்றம் திறக்கப்பட்ட அந்த நேரத்தில், அவர்களின் கூடாரங்கள் அகற்றப்பட்டன. அவர்கள் வலுக்கட்டாயமாக சிறைப் பிடிக்கப்பட்டனர். தவறு செய்தவர்கள் சுதந்திரமாய் இருக்க, நீதி வேண்டி போராடுகிறவர்கள் சிறையில் அடைக்கப்பட, நாடாளுமன்றம் திறக்கப்பட்டது. செங்கோல் கை மாற்றப்பட்டது. இந்தியா முழுவதும் அன்று மாலை நடை பெறவிருந்த ஐ.பி. எல் போட்டிக்காகத் தயாராகிக் கொண்டிருந்தது. **தோனி, தோனி, சி.எஸ்.கே., ஜி. டி., ஹர்திக் பாண்ட்யா,** என்கிற பார்வையாளர்களின் கோஷங்களின் உச்ச ஸ்தாயியில், மல்யுத்த வீரர்களின் குரல்கள் நாடாளுமன்றத்தைக் கூட எட்ட முடியவில்லை.

### இன்னும் இன்னும் மயக்கம்

நாமோ இன்னும் ஐ பி எல் என்னும் போதையில் மூழ்கி இருக்கிறோம். மழை வந்து கெடுத்த அந்த பைனலைப் பற்றியும், மறு நாளுக்கு மாற்றப்பட்டு விடியும் வரை விழித்திருந்து அந்த மாட்ச் பற்றியும், எப்போதும் இமோஷனல் ஆகாத தோனி உணர்ச்சி வசப்பட்டு ஜடேஜாவைத் தூக்கிக் கொண்டாடியதைப் பற்றியும் அளவளாவிக் கொண்டிருக்கின்றோம். ஐ பி எல் எனும் போதையில் பெண்களின் சுதந்திரம் பற்றியோ அவர்கள் மாண்பு பற்றியோ சிந்திக்க மனமில்லாமல் மயங்கிக் கிடக்கிறோம். இன்னும் நிறைய கொலோசேயம்கள் வரும். இன்னும் பெண்கள் பாதிக்கப்படுவார்கள். பெட்ரோல் விலை ஏறிக்கொண்டே இருக்கும். ரூபாய் நோட்டுக்கள் மதிப்பிழக்கம் நடை பெறும், விலைவாசி ஏறும், வரி விதிப்பு அதிகமாகும். அதனால் என்ன? அடுத்த ஆண்டு தோனி வருவார் என்கிற மயக்கத்திலேயே நாம் நாட்களைக் கடத்தி விடுவோம். எப்போது கோர்ட்டில் தீர்ப்பு வரும் என்று பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் காத்துக்கொண்டே இருப்பார்கள்!.

வாழ்க மக்களாட்சி. வாழ்க ஐ பி எல்.



அருட்பணி மரிய ஆண்டனி ராஜன் SDC

# விவிலியம் விழைவோம்

## யோசுவா நூல்

இஸ்ரயேல் அரசு:1 2சாமுவேல் 12 அரசர்கள் நூல்கள் நாடோடிகளாக வாழ்ந்து வந்த இஸ்ரேயல் மக்கள் தங்களுக்கு கடவுளால் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபின் ஒரே அரசாக தலையெடுக்கின்றனர். தங்களைச் சுற்றி வாழும் பிற அரசர்களை காணும் அவர்கள் கடவுளிடம் முறையிட்டு பென்யமின் குலத்திலிருந்து சவுல் என்பவரை அரசனாகப் பெற்றதன் மூலம் இஸ்ரேயலின் அரசாட்சி காலம் தொடங்குகிறது. இது ஏறக்குறைய கிமு1040-1030-ஆக இருக்கக் கூடும் என விவிலிய அறிஞர்கள் கணிக்கின்றனர். இதுமுதல் ஏறக்குறைய கி.மு.922-ல் சாலமோன் அரசு எரொபவாமால் இரண்டாக உடைக்கப்படும் வரை ஒற்றைத் தலைமையின் கீழ் இஸ்ரயேல் ஒரு ஒருங்கிணைந்த அரசாக விளங்கியது. இக்கால இஸ்ரேயல் வரலாற்று நிகழ்வுகளை சாமுவேலின் இருநூல்களிலும், அரசர்கள் நூல்களிலும் அறிஞர் கர்தினால் ரவாசி அவர்கள் முக்கிய வரலாற்று மாந்தர்களின் அடிப்படையில் பத்துப்பிரிவுகளாக பிரிக்கிறார்.

### முதல் பிரிவு(1சாமுவேல்1–7)

இப்பிரிவு சாமுவேலை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. சாமுவேலின் பிறப்பு (1சாமு1) மற்றும் அழைப்பை (1சாமு3) தொடர்ந்து இறைவழிபாட்டின் மையமாக விளங்கிய உடன்படிக்கை பேழையைக் கைப்பற்ற பெலிஸ்தியருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே நடக்கும் போர்களை விளக்குகிறது. இறுதியில் போரில் வெற்றி பெற்றாலும் உடன்படிக்கை பேழையை கைப்பற்றியதால் அந்நாட்டில் ஏற்படும் தீய விளைவுகளுக்குப் பயந்து உடன்படிக்கை பேழையை இஸ்ரயேலரிடன் திருப்பி அனுப்புவதைக் காண்கிறோம். அரசை ஒற்றைத் தலைவனாக ஆளுவதை இப்பகுதி நமக்கு அறிய தருகிறது.

### இரண்டாம் பகுதி(1சாமுவேல்8–15)

இப்பகுதி சாமுவேலிடமிருந்து ஆட்சி மாற்றம் பெற்று சவுலின் தலைமையில் அரசாட்சியாக உருவெடுப்பதை விளக்குகிறது. இரு வெவ்வேறு ஆட்சிமுறைகள் சந்திக்கும் இப்பகுதியில் மன்னராட்சியின் தொடக்கக் கால வலிமை சவுல் அரசரின் வெற்றிகளின் மூலம் (1சாமு10-11) சித்தரிக்கப்படுகிறது. நன்றாக போய்க் கொண்டிருக்கும் ஆட்சியில் இளைஞர் தாவீது சவுலுக்கு அறிமுகமாவதை 1சாமு15-ல் வாசிக்கிறோம்.

### மூன்றாம் பகுதி(1சாமுவேல்16–2சாமுவேல்1)

இப்பகுதி சவுல் அரசருக்கும் இளைஞர் தாவீதுக்கும் இடையே உருவாகும் காழ்ப்புணர்வையும் அதனால் அரங்கேறும் விளைவுகளையும் படம்பிடித்துக் காட்டுகிறது. கோலியாத்து, யோனத்தான், நாபால், அபிகாயில் என சிறு சிறு பாத்திரங்களின் மூலம் சில நிகழ்வுகளை விவரிக்கும் இப்பகுதி சவுல் அரசரின் தற்கொலையில் நிறைவடைகிறது.

### நான்காம் பகுதி(2 சாமுவேல்2–6)

இப்பகுதி முழுமையாக தாவீது அரசரைப் பற்றியதாகும். தாவீது அரசரின் அரியணையேற்றத்திற்குப் பின் இஸ்ரயேலின் பெருமையை பல போர்களின் வெற்றிகள் வழியாக நிலைநிறுத்தி எருசலேமை கைப்பற்றுவதோடு உடன்படிக்கைப் பேழையும் மீட்கப்படுவதை காண்கிறோம்.

### ஐந்தாம் பகுதி(2 சாமுவேல்7–12)

வரலாற்று நிகழ்வுகளைப் பற்றிய வரிசையில் இப்பகுதி ஒரு இறையியல் பகுதியாக அமைகிறது. வெற்றிகளின் புகழில் களிக்கும் தாவீது அரசர் ஒரு கட்டத்தில் கடவுளின் கட்டளைகளை மீறி பாவத்தில் வீழ்வதையும் அதற்கான படிப்பினைகள் வழங்கப்பட மனம் திருந்துவதையும் இப்பகுதியில் வாசிக்கிறோம்.

### ஆறாம் பகுதி(2சாமுவேல்13–20)

இப்பகுதி ஒரு கலகத்தை குறித்ததாகும். வயது முதிர்ந்த தாவீது அரசருக்கு எதிராக அவரது மகன் கலகம் செய்து தன்னையே அரசனாக திருநிலைப்படுத்துக் கொள்கிறார். கலகத்தை அடக்க முற்படும் தாவீது அரசரின் படைக்கு பயந்து ஓடும் நிலையில் அப்சலோமின் முடிவு மரணத்தில் முடிவதாகக் காண்கிறோம்.

### ஏழாம் பகுதி(2சாமுவேல்21–24)

தாவீது அரசரைத் தொடர்ந்து வரலாறு அவரது வாரிசான சாலமோனை நோக்கி நகர்வதை இப்பகுதி விளக்குகிறது. வெற்றிகளின் இறுமாப்பில் மக்கள் தொகையை கணக்கிட தாவீது அரசர் கட்டளையிடுகிறார். அரசரின் தற்பெருமையை அடக்கிட ஆண்டவர் தரும் தண்டனைகளை உணர்ந்து தாவீது அரசர் மனம் திருந்தி ஆண்டவரிடம் திரும்புவதாக சாமுவேலின் இரண்டாம் நூல் நிறைவடைகிறது.

### எட்டாம் பகுதி(1அரசர்கள்1–4)

இப்பகுதி மிகப்பெரிய போராட்டத்திற்குப் பிறகு இக்கட்டான சூழ்நிலையில் தாவீதின் அரியணை அவருடைய வாரிசான சாலமோனுக்கு வழங்கப்படுவதையும் அவரின் ஆட்சியையும் விளக்குகிறது. புதிய அரசராக கிபயோனில் ஆண்டவரிடம் ஞானத்தையும் கேட்டு பெறுகிறார். அந்த ஞானத்தின் வழியாக தன் ஆட்சியில் நீதியை நிலைநாட்டி ஞானத்தை அவரின் சின்னமாகவே மாற்றிவிடுகிறார். எனவே தான் விவிலியத்தில் ஞானநூல்கள்( சாலமோனின் ஞானம், நீதிமொழிகள், இனிமை மிகு பாடல்) இவற்றின் ஆசிரியராக கருதப்பட்டு வருகிறார்.

### ஒன்பதாம் பகுதி (1அரசர்கள்5–8)

இப்பகுதியானது சாலமோன் அரசரின் முன்னேற்பாட்டில் அரண்மனையும் எருசலேம் திருக்கோவிலும் கட்டிமுடிக்கப்பட்டு திருக்கோவில் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டதை விளக்குகிறது. திருக்கோவில் கட்டும் பணியை மூன்று முக்கிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்த முடியும்.

1. பலியிடுவதற்கென அமைக்கப்படும் பலிப்பீடத்தை உள்ளடக்கிய திருக்கோலின் உள் பகுதி
2. திருக்கோவில் வழிபாடுகளுக்கென கட்டப்பட்ட புனித அறை எனப்படும் திருக்கோவிலின் நடு அறை.
3. திருக்கோவிலின் புனிதத்தின் புனிதம் என்றழைக்கப்பட்ட கருவறை. அங்குதான் கடவுளின் உறைவிடம் என அறியப்பட்ட கெருபுகளின் இறக்கைகளுக்கு அடியில் உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டது.

### பத்தாம் பகுதி(1அரசர்கள்9–11)

இப்பகுதி சாலமோன் அரசரின் பெருமைமிகு ஆட்சியை படம் பிடித்துக் காட்டுகிறது. தீர் மன்னருடன் உடன்படிக்கை சேபா நாட்டு அரசியின் பெருமைமிகு புகழ்ச்சி செல்வச் சிறப்பு நாட்டின் வளர்ச்சி இத்தகைய சிறப்புகளின் நடுவில் தற்பெருமை என்னும் ஒற்றை நோயால் சாலமோன் அரசரின் ஆட்சி தடம் புரள்வதை காணமுடிகிறது. எதிரிகள் பெருகுகின்றனர். இறுதியில் சாலமோனின் ஆட்சி அவரது மகன் ரெகபெயாமிற்கு கைமாறுகிறது. அதன்பின் நடக்கும் மிகப்பெரிய கலகத்திற்கு பிறகு ஒருங்கிணைந்த அரசு இரண்டாக உடைக்கப்படுவதையும் காண்கிறோம்.

### நான்கு கதாநாயர்கள்

விவிலியத்தில் இப்பகுதியை (1சாமுவேல்1 - 1அரசர்கள்11) உற்று நோக்குகிறபோது நான்கு முக்கிய கதாநாயகர்களை கொண்டு இஸ்ரயேலின் ஒருங்கிணைந்த அரசின் வரலாறு கட்டமைக்கப்படுவதை காண முடியும்.




**சாமுவேல்:**

இறைவாக்கினர்களின் முன்னோடி நீதித்தலைவர்களில் கடைசியுமான அவர் மலடியாக கருதப்பட்ட அன்னாவிற்கு இறையருளால் மகனாகப் பிறக்கிறார். அக்கால பொய் இறைவாக்குகள் வெளிப்புற மதவாதங்கள் மற்றும் அதிகார அநீதிகளை நேரடியாக எதிர்க்கிறார் ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது எரிபலிகள் பிற பலிகள் செலுத்துவதா? அவரது குரலுக்குப் கீழ்ப்படிவதா? கீழ்ப்படிதல் பலியைவிடச் சிறந்தது. (1சாமு15:22)

**சவுல்:**

இஸ்ரயேலின் ஒருங்கிணைந்த அரசராக திருநிலைப்படுத்தப்படும் சவுலின் வாழ்க்கை ஆரவாரமாய் தொடங்கி பொறாமை குணத்தின் விளைவால் எதிரியை துரத்தி அலைவதிலே அவர் காலம் கழிகிறது. வாழ்க்கையின் கடைசிக்கட்டத்தில் எல்லாம் எதிர்மறையாக மாறிப்போக பெலிஸ்தியருக்கு எதிரான போரில் எதிரிகளின் கையில் சிக்கி கொலை செய்யப்படுவதற்குப் பயந்து தற்கொலை செய்வதாக அவர் வாழ்க்கை முடிவடைகிறது.

**தாமிது**

நான்கு கதாநாயகர்களில் முக்கியமானவராக விளங்குபவர் தாவீது அரசர் ஆவார். வரலாற்றில் தனிமனிதராகவும் குடும்பமாகவும் பல பிரச்சனைகளுக்கு ஆளாவர். அவரின் ஆட்சிக்காலம் பல போர்கள் மிகுந்திருந்தாலும் மக்களுக்கு நல்லாட்சி தரும் பெருந்தலைவராக சித்தரிக்கப்படுகிறார். பிற்கால வரலாற்றில் இயேசுவின் மீட்புப் பணியின் முன்னோடியாக அறியப்படுகிறார். இந்த மீட்பின் அடிப்படையிலான பார்வைக்கு தாவீதின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளின்று அடிக்கோட்டிட்டு காட்ட முடியும். அவைகளில் ஒன்று தாவீது அரசருக்கு இறைவாக்கினர் நாத்தான் முன்னறிவிக்கும் ஆண்டவரின் செய்தி (2சாமு7) அமையும். புதிய அரண்மனையைக் கட்டி அதில் குடியேறிய பின்பு தாவீது அரசர் ஆண்டவருக்கு கோவில் கட்ட ஆசைப்படுகையில் ஆண்டவர் தாம் தாவீதின் சிறு வீட்டிலே (எபிரேயத்தில் பஜித்) அதாவது வரலாற்றில் யூதமக்களுடனே வாழவிரும்புவதாகவும் தனக்கென மனிதர் கட்டும் தனி இருப்பிடம் தேவையில்லை எனவும் தெளிவுபடுத்துகிறார். இது எதிர்கால மீட்பர் தாவீதின் வழிமரபிலிருந்து தோன்றப் போவதற்கான தெளிவான முன்னிறவிப்பாக இரண்டாம் ஏற்பாட்டின் பல பகுதிகளில் சுட்டிக் காட்டப்படுவதைக் காண்கிறோம். (மத்1:1லூக்1:32-33 மாற்11:1012:35யோவா 13:18-19) பேரரசரான தாவீது இஸ்ரயேல் மக்களின் அடிப்படை செபங்களின் ஆசிரியர் என்பதையும் திருப்பாடல்களின் மூலம் அறியமுடியும். அவரின் கவிதை நடை பாடல்களுக்கு சவுல் யோனத்தானின் இறப்பில் அவர் பாடும் துயரவரிகள்(2சாமு1:19-27) சான்றாகும்.

**சாலமோன்:**

எருசலேம் ஆலயத்தைக் கட்டியெழுப்பிய பெருமைக்குரிய சாலமோன் (1அரச8) இறையியல் மிக்க வரிகளின் மூலம் ஆலயத்தின் மறைபொருளை அப்பகுதியில் விளக்குவது மிக அருமை. ஆலயத்தின் பெருமையுடன் ஆண்டவரின் அருட்பிரசன்னம் ஒவ்வொரு படைப்பிலும் வானக அண்டங்களிலும் உண்டு என அன்றைய யூத இறையியலை தெளிவாக சாலமோன் அரசர் விளக்குகிறார் (1அரச.8:27-30). ஆலயம் என்பது வழிபாட்டின் இல்லம்( எரே7 எசா56:7 மத் 21:13) மக்கள் ஆண்டவரை சந்திக்கும் இடம். மனித சிந்தனைக்கு எட்டாத ஆண்டவர் மக்களோடு உறவாட இறங்கி வரும் இடமே ஆலயம். விண்ணகமே கொள்ள இயலாத ஆண்டவர் நம் வழிபாட்டில் நம்மோடு உறவாட வருகையில் இவ்வாலயமும் விண்ணகமாகிப் போகிறது என்கிறார் சாலமோன் அரசர். இறைக்கும் மனிதத்திற்குமான உறவை வரலாற்றில் விளக்கும் இந்நூல்கள் பாவம்,தண்டனை, மனவருத்தம், மன்றாடுதல் மன்னிப்பு, விடுதலை என்ற பாணியிலே சுழன்று வருவதை காணமுடிகிறது. ஒருங்கிணைந்த இஸ்ரயேல் அரசு இரு வேறு எதிரி அரசுகளாக உடைபடுகிறது..

தொடரும்



திரு போஸ்கோ எழிலன், ஆசிரியர்

# பெண்களுக்கு கல்வியே ஆயுதம்

மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்று பாடிப் பெண்ணின் பிறப்பை மகத்துவப் படுத்தினார் மகா கவிபாரதியார். மூன்றாவதும் பெண் பிறந்துவிட்டது என்று ஆதங்கப்பட்டு அல்லலுறுருபவர்களுக்கு ஆறுதலான வரிதான் இது. பெண்ணை கண்ணென்றும் மணியென்றும் புகழ்ந்துத் தள்ளினாலும் நிஜவாழ்க்கையில் இப்படிப் போற்றப்படுவதில்லை. என்பதுதான் உண்மை. திரைப்படங்களில் பெண்ணை மகா உன்னத நிலையில் காட்டுகின்றனர். ஆனால் ஆணுக்கு நிகரான சம்பளம் கொடுப்பதில்லை என்று கூறுகின்ற நடிகைகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். பெண்களுக்கு 33 சதவித இட ஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்துள்ளன மத்திய மாநில அரசுகள். ஆனால் முழுமையாக சட்டம் நடைமுறைப்படுத்தவில்லை என்பது வருந்தத் தக்க ஒன்றாகும்.

**மாற்றமே மானிட தத்துவம்** இருப்பினும் காலந்தோறும் ஏற்படும் சட்டதிட்ட மாற்றத்தால் பெண்கள் வாழ்வில் போற்றத்தக்க வகையில் வளர்ச்சியும் ஏற்பட்டுத்தான் வருகிறது. அடுப்பூதும் பெண்களுக்குக் கல்வி எதற்கு? என்ற காலம் மலையேறி விட்டது. பெண்கள் மத்தியில் கணிசமான அளவுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. போகப்பொருளாகப் பார்க்கப்படும் பெண்கள் வாழ்வில் புதுவிடியல் தோன்றியுள்ளது. ஏன்? எதற்கு என்னும் கேள்விக் கணைகள் வீசுகின்றனர். பொறுத்தது போதும் என்று அடங்கிக் கிடக்காமல் புதுவெள்ளமாய்ப் பொங்கியெழுகின்றனர். எதிலும் எனக்கு வேண்டும் எங்களுக்கும் வேண்டும் என்று பேராட்டம் நடத்துகின்றனர். சொத்தில் சமஉரிமை! சுகபோகத்திலும் சமஉரிமை! இதுதான் எங்கள் இலட்சியம்! என்கின்றனர். சமூகத்தில் பெண்களுக்கான அங்கீகாரத்தைக் கல்வி மட்டுமே பெற்றுத்தரும்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது பாவம் என்று எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார். பாரதியின் கனவு நனவாகிவிட்டது. சாமானிய குடும்பத்தில் பிறந்து சரித்திரம் படைத்த மாணவியாக நந்தினி விளங்குகின்றார். பிளஸ் 2 தேர்வில் 600/600 மார்க்கு எடுத்து சரித்திரம் படைத்துள்ளாள். இவர்



திண்டுக்கல் நாகல்நகர் பொன் சீனிவாச நகரைச் சேர்ந்தவர். தந்தை சரவணக்குமார் தாய் பானுப்பிரியா. தந்தை தச்சுத் தொழிலாளி. தாய் குடும்பத் தலைவி. தம்பி பிரவின். கடந்த மாதம் 8-ம் தேதி பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியானது. தேர்வு முடிவுகள் வெளியான கொஞ்ச நேரத்தில் ஒட்டுமொத்த பார்வையும் திண்டுக்கல் பக்கம் திரும்பியது. திண்டுக்கல்லைச் சேர்ந்த மாணவி நந்தினி 6 பாடங்களிலும் 100க்கு 100 மதிப்பெண் எடுத்துள்ளார். இது பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவு வரலாற்றில் இதுவரை யாரும் தொடராத சாதனை ஆகும். சாதாரண குடும்பத்தில் பிறந்து சாதித்த நந்தினியை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் அழைத்து பாராட்டியது குறிப்பிடத்தக்கது. பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். நந்தினியின் குடும்பம் பாராட்டு மழையில் நனைகின்றது. வரலாற்று சாதனை படைத்த மாணவி நந்தினி திண்டுக்கல் அண்ணாமலையார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படித்துள்ளார். நந்தினியின் தாயாரும் இப்பள்ளியிலேயே படித்துள்ளார். ஒவ்வொருவரின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பது கல்விதான். எனவே அனைவருக்கும் கல்வி அவசியம். அதிலும் பெண்களுக்குக் கல்விபோன்ற ஆயுதம் வேறு எதுவும் இல்லை! ஒவ்வொரு பாடத்தையும் முழுமையாகப் படிப்பதோடு எழுதி பார்த்து மனத்தில் பதியவைத்து கொண்டால் நல்ல மதிப்பெண்களைப் பெறலாம் என்கிறார் மாணவி நந்தினி.

# தாயின் 7 வார்த்தைகள்

காந்திரோஸ்

கன்னி மரியே! கருவைத் தாங்கி
கர்த்தரைப் பெறுவாய் – எனும்
தூதர் சேதி கேட்ட மரியா மலர்ந்தனள் திருவாய்
கன்னியான எனக்கு இது எப்படி நிகழ்வாய் அமையுமென்று
அன்னை கேட்டாள் அவரிடம் கனிவாய்!

தூய ஆவி வந்து உந்தன்மீது நிழலிடும்
தூய இறைமகனுக்குந்தன் வயிறே பிறப்பிடம்
நேய உறவு எலிசபெத்தால் உண்மை புலப்படும் – தாய்மை
பேறுகொண்ட அவளுக் காறாம் மாதம் நடந்திடும்

ஆண்டவரின் அடிமை உந்தன் சொற்படி ஆக – என
அன்னை சொல்ல வானதூதர் அகன்றுமே போக
அருமை எலிசபெத்தைத் தேடி அவரில்லம் செல்ல – கண்ட
அன்னை வாழ்த்தால் வயிற்றுக் குழந்தை துள்ளிற்று மெல்ல!

வாழ்த்துரையைக் கேட்டவுடன் பிள்ளை துள்ளிற்று – நீ
ஆண்டவரின் தாயெனவே உள்ளம் சொல்லிற்று – என்ற
எலிசபெத்தின் வார்த்தைகளை மரியன்னை கேட்டு – மனம்
இறையைப் புகழ்ந்து போற்றியதே சங்கீதப் பாட்டு!

பாஸ்கா விழா கொண்டாடவே எருசலேம் சென்றார் – மகனைக்
காணாததால் சூசை மரி வாடியே நின்றார்
ஆலயத்தில் இயேசுவையே இருவரும் கண்டார்
மகனே, கவலையோடு தேட வைத்தது ஏனோ? என்றார்

கானாவூரின் திருமணத்தில் கலந்து கொண்டனள் – மண
வீட்டார் திராட்சை இரசக்குறைவால் தவிக்கக் கண்டனள்
தானாகவே திருமகனை தேடிச் சென்றனள் – மகனே!
திருமணத்தில் திராட்சை இரசம் தீர்ந்த தென்றனள்

அம்மா! எனக்கு இதுவரையில் வரவில்லை நேரம் – என்ற
அருமை மகன் இயேசு சொன்ன வார்த்தையே போதும் – என
அம்மா தரசி பணியாளரை அழைத்து அப்போதும்
அவர் சொல்வதைப்போல் செய்வீர் எனச் சொன்னதே வேதம்!

ஏழுமுறை அன்னை பேச்சை விவிலியம் கூறும் – நமக்காய்
என்றென்றும் பேசுவதாய் நம்பிடும்தோறும் – அவள்
பரிந்துரைகள் உடனடியாய் இறைவனைச் சேரும் – எதையும்
அன்னை வழி கேட்டு வைப்போம்; நம் குறையெல்லாம் தீரும்!

# பூசாரிக்கு வந்த புதுவாழ்வு



புலவர் ஆரோக்கியம் . சி

ஒரு ஊரிலே அண்ணன் தம்பி இரண்டுபேர் வாழ்ந்து வந்தாங்க. இரண்டுபேருக்கும் கல்யாணம் நடந்துவிட்டது. திருமணத்திற்குப் பிறகும் தனிக்குடித்தனம், என்று பிரிந்து வாழாமல் கூட்டுக் குடும்பபமாய் வாழ்ந்தாங்க. ஊரே இவர்களின் ஒற்றுமையையும் பாசத்தையும் கண்டு வியந்தாங்க. சிலர் கொஞ்சம் பொறாமையும் பட்டாங்க. கலகம் செய்தும் பார்த்தாங்க. எதனாலும் இவர்களைப் பிரிக்க முடியவில்லை.

அண்ணன் சொல்வதைத் தட்டாமல் தம்பி கேட்பான். தம்பி சொல்வதை அண்ணன் கேட்பார். கருத்துவேறுபாடு வந்தாலும் உடனே பேசி மாற்றிக் கொள்வாங்க. அப்பா விட்டுச் சென்ற நிலத்தை உழுது பயிர்ச் செய்வாங்க. வருமானத்தை அண்ணன் வைத்துக் கொண்டு செலவு செய்வார். பிள்ளைகளைப் படிக்க வச்சாங்க. அண்ணன் பிள்ளைகள் தம்பி பிள்ளைகள் என்று வேறுபாடு காட்டுவதில்லை.

ஊரே இவங்க நிலையைப் பார்த்து இது ஒரு முன்மாதிரியான குடும்பம் என்று போற்றினார்கள். இராமன் இலட்சுமணன் போல இருக்கிறாங்க. அரச பதவியைத் துறந்து இராமன் காடு சென்றான். அண்ணனுக்குத் துணையாகத் தம்பியும் உடன் சென்றான். அதுபோல இவர்களும் ஒருவருக்கு ஒருவர் துணையாய் இருக்கிறாங்க என்று ஊரார் பேசிக் கொண்டார்கள்.

பிரச்சனைகள் ஏதாவது ஒருவடிவில் வந்துவிடும். ஆனால் இவர்களுக்கு எந்த வடிவிலும் வரவில்லை. அப்பா இறந்தார் அவருக்குத் தலைப்பிள்ளை என்ற முறையில் கொள்ளி(தீ) வைத்தார். கொஞ்சக் காலத்திற்குப் பிறகு தாய் இறந்தார். தாய்க்குக் கடைக் குட்டி என்ற முறையில் தம்பி வைத்தான். காரியகருமங்களை இருவரும் சேர்ந்தே வைத்தார்கள். இந்தச் சாவு வாழ்விலாவது பிரச்சனைகள் வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஏமாற்றம் அடைந்தார்கள்.

அப்பாவுக்கு இரண்டுதாரம். சித்திமட்டும் இருந்தார். அவரும் இவர்களுடன் சேர்ந்து வாழ்ந்தார். எந்தக் குறையும் அவருக்கு வைக்கவில்லை. அப்பா உயிரோடு இருக்கும்போதே சித்தியின் பாதுகாப்புக்காக ஒரு ஏக்கர் நிலத்தை அவர் பேரில் உயில் எழுதி வைத்திருந்தார். அதையும் இவர்களே சேர்த்து பயிர் செய்து வந்தார்கள். சித்திக்கு வயதாகிவிட்டது. உடல் நலமின்றி இறந்தார். அவரை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். தந்தைக்குத் தலைப்பிள்ளைத் தாய்க்குக் கடைப்பிள்ளை என முறைப்படி கொள்ளி(தீ) வைத்தார்கள். இப்போது சித்திக்கு யார் கொள்ளி வைப்பது? அவர்பேரிலுள்ள ஒரு ஏக்கர் நிலம் யாருக்கு என்ற நிலை ஏற்பட்டது. அண்ணன் கொள்ளி வைப்பதற்கு தம்பி எதிர்ப்பு தெரிவித்தான். நான்தான் வைப்பேன் என்று அடம் பிடித்தான். தம்பியா இப்படிக் கூறுகின்றான்? இவனுக்கு என்ன வந்தது? அண்ணனுக்குப் புரியவில்லை.

ஊரார் எதிர்பார்த்த நேரம் வந்தது. ஊரார் இரண்டு பிரிவாகப் பிரிந்து பேசினார்கள். அண்ணன் வைப்பதுதான் முறை என்றனர். ஒரு பிரிவினர் தம்பி வைப்பதுதான் முறை என்றனர். இதனால் சித்தியை அடக்கம் செய்வதில் தாமதம் ஏற்பட்டது. சித்தியின் உடலை பிணவறையில் வைத்தனர். எந்த வகையிலும் சமரசம் ஏற்படவில்லை.

போலீஸ் ஸ்டேஷன் போனார்கள். போலீசாரும் இரண்டு பிரிவாகப் பேசினார்கள். ஏதாவது உயில் எழுதி வைத்திருக்கிறாரா? என்று ஆராய்ந்தார்கள். தந்தை சித்திக்கு எழுதி வைத்த உயிலுடன் இன்னுமொரு உயிலும் இருந்தது. எடுத்தார்கள். படித்தார்கள்.

நான் இறந்த பிறகு, எனக்கு இரண்டுபேரும் கொள்ளி வைக்க வேண்டாம். என்பேரிலுள்ள நிலத்தை சிவன்கோவிலுக்குத் தானமாக எழுதிவைக்கிறேன். கோவில் பூசாரியே எனக்கு கொள்ளி வைக்கட்டும். என் கழுத்திலுள்ள பொன்நகைகளைப் பூசாரிக்கே கொடுத்துவிடுங்கள். இதுவே என் கடைசி விருப்பம். இதனை யாரும் மீறக்கூடாது. எல்லாரும் வாயடைத்து நின்றார்கள். பூசாரிக்கு வந்த வாழ்வைக் கண்டு வியந்தார்கள்.



அருட்பணி எடல் SdC



# புனைவுகளில் தூய சூசையப்பர்

இறைமகன் இயேசு வரலாற்றிலே மனிதராக வாழ்ந்த கடவுள் என்பதை யாராலும் மறுக்கமுடியாத உண்மை. சில ரோமானிய வரலாற்றாசிரியர்கள் அவரது நீண்ட நெடிய வாழ்க்கை வரலாற்றை எழுதவில்லையென்றாலும் அவரைப் பற்றிய குறிப்புகளை தங்களது புத்தகங்களிலே பதிவு செய்துள்ளனர். அதில் முக்கியமானவர்கள் பிளாவியோ, சுயதோனியோ, பிளினியோ, தாச்சிதோ போன்றவர்கள் ஆவார்கள். ஆனாலும் தூய சூசையப்பர் குறித்து இவர்கள் யாரும் பதிவு செய்யவில்லை. இறைமகன் இயேசுவின் காலத்தில் அவரது வரலாற்றை நற்செய்தியாளர்கள் தவிர்த்து வேறு சிலரும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் சிலவேளைகளில் அந்நற்செய்திகள் மிகவும் கற்பனைத்தனமானதும் புனைவுகளின் கோர்வையாகவும் இருந்த காரணத்தினால் அவைகளைத் திருச்சபை ஏற்காமல் புறந்தள்ளிவிட்டது. இன்றும் அம்மாதிரியான நூல்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவைகளில் தூய சூசையப்பர் எவ்வாறான மனிதராக உள்ளார் என்பதை தெரிந்துகொள்வோம்.

மாற்கு மத்தேயு லூக்கா யோவான் போன்ற நற்செய்தியாளர்கள் எழுதிய நற்செய்தியே விவிலியத்தில் இடம் பெற்றுள்ளது. இவைகள் அல்லாது இராயப்பர் தோமையார் மரியமதலேனாள் இவர்கள் பெயரிலும் நற்செய்திகள் உண்டு. அதுமட்டுமில்லாது யூத நற்செய்தி பன்னிருவர்களின் நற்செய்தி போன்றவைகளும் உண்டு.

இம்மாதிரியான எண்ணிக்கையிலடங்கா நற்செய்திகளை திருச்சபை புறந்தள்ள மிக முக்கிய காரணம் இவை எழுதப்பட்டவைகளின் காலமாகும். ஏறக்குறைய இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டவை. விவிலியத்தில் இடம் பெற்றிருக்கும் நற்செய்திகள் அந்தந்த ஆசிரியர்களால் நேரடியாக இயேசு மரித்து உயிர்த்தெழுந்த அதே காலகட்டத்தில் எழுதப்பட்டவை. மற்ற நற்செய்திகள் சில இயேசுவின் சீடர்களின் பெயர்களை கொண்டிருந்தாலும் அவைகளை அவர்கள் நேரடியாக எழுதவில்லை. அவர்கள் வாழ்ந்து மரித்தபின் எழுதப்பட்டவை. இம்மாதிரியான நற்செய்திகளை திருச்சபை ஏற்காமல் போனதற்கு இரண்டாவது முக்கிய காரணம் நம் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிரான கருத்துகளை கொண்டிருப்பதுமாகும்.

இம்மாதிரியான நற்செய்திகளில் நாம் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆயினும் இவைகளில் நம் தூயவர் சூசையப்பரைக்குறித்து சொல்லப்பட்டுள்ளவைகள் அவரைப்பற்றி நாம் அதிகம் தெரிந்துகொள்ள உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**யாகப்பரின் நற்செய்தி:** புனித யாகப்பர் இயேசுவின் சீடர்களில் ஒருவர். அவர் எழுதியதாகக் கூறப்படும் நற்செய்தி ஒன்று உண்டு. ஆனால் இதை அவர்தான் எழுதினார் என்பதற்கு எந்தவித நம்பகத்தன்மையுமில்லை. ஏனென்றால் அவர் வாழ்ந்த காலம் வேறு இந்நற்செய்தி எழுதப்பட்ட காலம் வேறு. இந்நற்செய்தியிலே இயேசுவின் பிறப்பைப் பற்றி குறிப்பிடும்பொழுது ஏறக்குறைய நாம் மத்தேயு நற்செய்தியிலே வாசிப்பது போலவே உள்ளது. ஆனால் யாகப்பர் நற்செய்தியிலே தூய சூசையப்பர் மிகவும் கடுமையானவராக நடந்து கொள்கிறார். அமைதியின் புனிதரான தூய சூசையப்பர் நாம் வாசிக்கின்ற நற்செய்திகளில் ஒரு சொல் கூட பேசாதவர். ஆனால் யாகப்பர் நற்செய்தியிலே அவர் இவ்வாறு கூறுகிறார்: **நான் நடக்கத்தொடங்கினேன் நடக்கமுடியவில்லை காற்று நகரவில்லை எல்லாமே ஏதோ கட்டி வைத்தது போல் தோன்றியது. பறவைகள் உணவை வாயில் வைக்கின்றன ஆனால் உண்ண முடியவில்லை. இடையர்கள் தங்கள் ஆடுகளை தொட முனைகிறார்கள் ஆனால் முடியவில்லை. ஆடுகள் தண்ணீர் குடிக்க முயல்கின்றன ஆனால் குடிக்கவில்லை. எல்லாம் ஒரு நிமிடம் அசைவற்று நின்றன. ஆனால் குழந்தை (இயேசு) பிறந்த பிறகு எல்லாம் இயல்பு நிலைக்கு திரும்பின.** இவ்வாறு தூய சூசையப்பர் கூறுவதாக எழுதப்பட்டிருக்கின்றது. இந்நற்செய்தியில் தூய சூசையப்பர் மிகவும் கடுமையான கணவராக சித்தரிக்கப்பட்டிருக்கிறார்.

**தோமையாரின் நற்செய்தி:** இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட இந்நற்செய்தியை முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த இயேசுவின் சீடரான தோமையார் எழுதியிருக்க உறுதியாக வாய்ப்பில்லை. யூத சமய கோட்பாடுகளின் அடிப்படையிலும் அதன் இலக்கிய வடிவிலுமுள்ள இந்நற்செய்தியில் சிறுபருவத்திலுள்ள இயேசுவை ஒரு குறும்புக்கார சிறுவனாகவும் அவரது தந்தையான தூய சூசையப்பரை ஒரு கண்டிப்பான தந்தையாகவும் காட்டுகிறது. ஒரு முறை சூசையப்பர் சிறுவனாகிய இயேசுவை கல்வி கற்க வைப்பதற்காக ஒரு ஆசிரியரிடம் அழைத்துச் செல்கிறார். ஆனால் இயேசுவோ அந்த ஆசிரியரின் சொல்பேச்சு கேட்காமல் அவரிடம் முரண்வாதம் செய்கிறார். இச்செய்தி சூசையப்பரின் காதுகளுக்குச் செல்ல அவர் சிறுவன் இயேசுவின் காதைத் திருகி கண்டிக்கிறார். அதே சமயத்தில் அன்னை மரியாவிடம் சிறுவன் இயேசுவைப் பற்றி பெருமிதம் கொண்டு இவ்வாறு கூறுகிறார்: நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்; ஏனென்றால் கடவுள் எனக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல குழந்தையை மகனாக கொடுத்துள்ளார். அதே சமயத்தில் இந்நற்செய்தி சூசையப்பரை குறும்புக்கார இயேசுவை சரியாக முறையில் வளர்க்கத் தெரியாமல் தோல்வியடைந்த ஒரு தந்தையாக சித்தரிக்கின்றது.

**தச்சரான சூசையப்பரின் வரலாறு:** மற்ற நூல்களைப் போல் அல்லாமல் இந்நூல் தூய சூசையப்பரைப் பற்றி அதிக செய்திகளைத் தரும் ஒரு நூலாக அமைகின்றது. இந்நூலானது இறைமகன் இயேசுவுக்கும் தூய சூசையப்பருக்கும் உள்ள ஒரு ஆழ்ந்த அன்பு நிறைந்த உறவை வெளிப்படுத்துகிறது. தூய சூசையப்பரின் வாழ்க்கையை இறைமகன் இயேசு கூறுவதுபோல் அமைந்துள்ளது இந்நூல். ஒருமுறை இயேசு தன் சீடர்களுடன் ஒலிவமலையில் அமர்ந்து கற்பித்துக் கொண்டிருக்கிறார். அப்பொழுது அவர் அவரது சீடர்களிடம் கூறினார்: **இதோ கேளுங்கள் இப்பொழுது நான் உங்களிடம் என் தந்தையின் வாழ்க்கையைப் பற்றி கூறப்போகிறேன். அவர் பேறுபெற்ற முதிர்ந்த தச்சர்.** இவ்வாறு தொடங்கி சூசையப்பரைப் பற்றி அதிக செய்திகளை இயேசு கூறுவது போல் அமைந்துள்ளது. சூசையப்பர் தனது முதல் திருமணத்தை 49 வயதாகும் பொழுது செய்து கொண்டதாகவும் தனது 88 ஆம் வயது வரை தனது முதல் மனைவியுடன் வாழ்ந்ததாகவும் பின்னர் அம்மனைவி இறந்தபின் ஒரு ஆண்டு திருமணமின்றி வாழ்ந்து தனது 89 ஆம் வயதில் அன்னை மரியாவை திருமண ஒப்பந்தம் செய்ததாகவும் அதன் பின்னர் இயேசு பிறக்கும் பொழுது அவருக்கு 93 வயது முதிர்ந்தவராகவும் பின்னர் அவர் மரியாவுடன் 18 ஆண்டுகள் வாழ்ந்து தனது 111 வயதில் மரணமடைந்ததாகவும் இயேசு கூறுவது போல் இந்நூல் அமைந்துள்ளது. அதே போல் சூசையப்பருக்கு முதல் மனைவி மூலம் ஆறு பிள்ளைகள் எனவும் அவற்றில் யாகப்பர் சூசை சீமோன் மற்றும் யூதாஸ் என நான்கு ஆண் பிள்ளைகளும் லிசியா மற்றும் லிடியா என இரண்டு பெண் பிள்ளைகள் கொண்டவராகவும் காட்டுகின்றது. இயேசு தனது சீடர்களிடம் எவ்வாறு சூசையப்பர் அன்னை மரியா கருவுற்றிருந்தை அறிந்த பொழுது அதிர்ச்சியடைந்தார் என்பதையும் பின்னர் வானதூதர் உரைத்ததைக் கேட்டு அன்னை மரியாவை எவ்வாறு ஏற்றுக்கொண்டார் என்பதையும் விளக்குவதாக அமைந்துள்ளது. இயேசு தனது பிறப்பின் பொழுது எவ்வாறு சூசையப்பரும் அன்னை மரியாவும் துன்பப்பட்டார்கள் என்றும் எகிப்திற்கு தப்பிச் செல்லும் பொழுது அனுபவித்த இன்னல்களையும் எல்லாம் நிறைவுற்று எவ்வாறு வந்து கலிலேயாவில் குடிபுகுந்தார்கள் என்பதையும் தனது சீடர்களிடம் விவரிக்கின்றார்.

இறுதியாக இயேசு, சூசையப்பர் எவ்வாறு இறந்தார் என்பதையும் கூறுகின்றார். இறக்கும் தறுவாயில் விவிலியத்தில் வருகின்ற யோபை போல் தனது தவறுகளுக்கு மனம் வருந்தி கடவுளிடம் மன்னிப்பை வேண்டி புலம்பியதாகவும் அப்பொழுது இயேசுவின் குரலைக் கேட்டு அவரது கலங்கிய மனது அமைதி அடைந்ததாகவும் பின்னர் இயேசுவின் காதைச் செல்லமாக திருகி புத்தியுள்ளவனாக இரு என் மகனே என்று அறிவுரை கூறியதாகவும் இறுதியாக நீயே கிறிஸ்துவாகிய இயேசு நீயே உண்மையான கடவுள் அதே சமயத்தில் உண்மையான மனிதன் என்று தனது நம்பிக்கை அறிக்கையை கூறி தூய சூசையப்பர் உயிர்நீத்ததாகவும் இச்சொற்களைக் கேட்டபின் தனது அடக்கமுடியாத சோகத்தை கண்ணீரின் மூலம் வெளிப்படுத்தியதாக இயேசு தனது சீடர்களிடம் கூறுவது போல் அமைந்துள்ளது இந்நூல். நான்காம் நூற்றாண்டில் எகிப்தில் எழுதப்பட்ட இந்நூல் உண்மையான வரலாற்றை கூறுகின்றது என்று கூறவே முடியாது. அதே சமயத்தில் இறைமகன் இயேசுவின் கரங்களிலும் அன்னை மரியாவின் கரங்களிலும் தூய சூசையப்பர் தனது இறுதி மூச்சினை சுவாசித்து இறந்தார் என்று கூறும் மிகப்பழையான நூல் இது ஒன்றே ஆகும். (தொடரும்)

# மக்கள் பணியே மகேசன் பணி

திருமதி ராஜாத்தி

அன்பு பிள்ளைகளே! நீங்க நல்லா இருக்கிறீங்ககளா? கோடை விடுமுறை முடிந்துவிட்டது.மீண்டும் பள்ளித் தொடங்கிவிட்டது. விடுமுறையில் ஜாலியா ஊர்சுற்றி வந்தீங்க கிரிக்கெட் அடிச்சிங்க புதுப்புது சினிமாவுக்குப் போனீங்க! குளம் குட்டை என்று பாராமல் தண்ணியிலே விளையாடினீங்க! இதுயெல்லாம் தேவைதான். இந்த வயதிலே இதெல்லாம் சகஜந்தான். தவறு இல்லை. உருப்படியான வேலை என்ன செய்தீங்க?

ஆன்ட்டி! என்ன இப்படி கேட்டுவிட்டுங்க! நாங்க எதைச் செய்தாலும் ஒரு குறிக்கோளுடன்தான் செய்வோம். சும்மா ஊர் சுற்றுவதா நீங்க நினைப்பது தவறு. நாங்கள் என்ன செய்தோம் என்று தெரிந்தால் நீங்க எங்களைப் பாராட்டுவீங்க?



பொன்னன் கண்ணன் விமலன் மூவரும் இணைபிரியா நண்பர்கள். பள்ளியில் ஒன்றாகப் படித்தார்கள். சிறுவர்களாக இருந்தாலும் ஊரார் போற்றும் பிள்ளைகளாய் மூவரும் இருந்தார்கள். பிள்ளைகளுக்குரிய குறும்புத்தனம் இருந்தது. விளையாட்டுக் குணமும் இருந்தது.

இந்த விடுமுறையில் உருப்படியாக ஏதாவது செய்யவேண்டும் என்று தீர்மானித்தார்கள். நம்ம ஊரு அழகான ஊர். மலைசூழ்ந்த ஊர். மரங்களும் செடிகளும் படர்ந்து ஊருக்கு அழகு தந்தது. ஊர்மக்கள் கல்வியறிவு அதிகம் பெறதாதவர்கள். ஆடு மாடு மேய்ப்பது, நிலத்தில் பயிர் செய்வது, விளைந்த பொருட்களைத் தலையில் சுமந்து பக்கத்து டவுனுக்குப் போய்விற்று பொருட்கள் வாங்கிவருவார்கள். இவையெல்லாம் மூவருக்கும் நன்கு தெரியும்.

ஊரிலுள்ள குடும்பங்களில் இருக்கும் பிள்ளைகளில் சிலருக்கு மட்டும் கல்வி கிடைக்கிறது. எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்கிறார்களா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினாங்க. இந்தக் கணக்கெடுப்பு எல்லாம் அரசாங்க அதிகரிகள் செய்யவேண்டிய வேலை. நம்ம வேலையல்ல என்றான் பொன்னன். ஆமாம் என்றான் கண்ணன். அது தவறு என்றான் விமலன் இது நம்ம ஊரு! நம்ம ஊரு வளரணும். நம் ஊர் பிள்ளைகளுக்குக் கட்டாயம் கல்விக் கிடைக்கணும். சரிப்பா..அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? என்று எதிர்வினா தெடுத்தான் கண்ணன். சரி? நான் வழி சொல்கிறேன். ஒவ்வொரு வீடாகச் செல்வோம். ஒவ்வொரு வீட்டிலும் பள்ளிச் செல்லும் குழந்தைகள் யார்? பள்ளிச் செல்ல வயது இருந்தும் பள்ளிச் செல்லாமல் இருப்பது ஏன்? எனத் தெரிந்து கொள்வோம். பெற்றோரிடம் கல்வியின் மேன்மையை எடுத்துச் சொல்வோம். கல்வி கற்காதவன் முகத்திருப்பது கண் அல்லல்! அது புண்! எனச் சுட்டிக் காட்டுவோம். குழந்தைகள் கல்வி கற்காவிட்டால் அவர்களின் எதிர்காலம் பாழாகிவிடும். கல்வியே உலகத்தைப் பார்க்க வழிஏற்படுத்தும்.

சரி என்றான் விமலன். மூவரும் சேர்ந்து ஒவ்வொரு வீடாகச்சென்று பள்ளிச் செல்லும் குழந்தைகள், பள்ளிச் செல்லா குழந்தைகள் எவ்வளவுபேர் என கணக்கு எடுத்தார்கள். ஊரிலுள்ள குழந்தைகளில் பாதிபேருக்குமேல் பள்ளிச் செல்லவில்லை என்பதை அறிந்து அதிர்ச்சியடைந்தார்கள. பள்ளிச் செல்ல வழிகாட்டினார்கள். பெற்றோரும் மகிழ்வுடன் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என மூவரும் மகிழ்ந்தார்கள். ஆன்ட்டி! என்ன! எங்கள் வேலையைப் பார்த்திங்களா? ஆன்ட்டி சபாஷ் சொன்னாங்க!



திரு எழில்– ஆசிரியர்

# வலிப்பு நோய் (EPILEPSY)

**வலிப்பு :**

வலிப்பு என்பது ஒரு நோயின் அறிகுறியே தவிர நோய் அல்ல. அதாவது மூளை பாதிக்கப்பட்டுள்ளது என்றோ அதிக காய்ச்சல் உயர் இரத்தம் போன்ற காரணங்களால் உடல் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிகுறிகளாக தெரிவிப்பதற்கே வலிப்பு ஏற்படுகிறது. இச்சமயத்தில் அவர்களுக்கு கை மற்றும் கால்கள் இழுத்துக்கொள்ளும் வாயிலிருந்து நுரை தள்ளும் கண்கள் மேலே சுழன்றும்நாக்கை பற்களுக்கிடையே கடிப்பதும் சுய நினைவை இழந்தும் இருப்பர். சில நிமிடங்களில் பாதிக்கப்பட்டவர்கள் சரியாகி கொஞ்சம் கொஞ்சமாக சுய நினைவுக்கு வருவார்கள் இந்நிலைக்கு பெயர்தான் வலிப்பு ஆகும்.

**நிலைகள்:**

- ஆரா(ஆரம்பநிலை)
- ப்ரோட்ரோம் (இரண்டாம் நிலை)
- இக்டல்(நடுத்தர நிலை)
- பிந்தைய இக்டல்(இறுதி நிலை) - என நான்கு நிலைகளாகும்.

**அறிகுறிகள்:**

- கால்கள் மற்றும் கைகளில் கட்டுப்படுத்த முடியாத அசைவுகள்
- கை கால் அல்லது தசைகளை தளர்த்தல்
- குழப்பம்
- அடிக்கடி உற்றுப் பார்ப்பது
- உபாதை உணர்வு போன்ற திடீர் உணர்வு நிலைகள்
- மயக்கநிலை
- நாக்கு மற்றும் வாயின் தன்னிச்சையான இயக்கங்கள்
- விரைவாக கண் சிமிட்டுதல்
- தரையில் விழுவது

**வலிப்பின்போது மூளையில் ஏற்படும் மாற்றங்கள்:**

மூளை மற்றும் நரம்பு செல்களில் தகவல் பரிமாற்றம் செய்வதற்கு அந்த செல்களுக்கிடையில் இயல்பாகவே மிகச்சிறிய அளவில் மின்சாரம் உற்பத்தியாகிறது. திடீரென மூளையில் உண்டாகிற அதீத அழுத்தத்தினால் இந்த மின்சாரம் ஆனது அதிகளவில் உற்பத்தியாகி ஒரு மின் புயல் போல் கிளம்புகிறது. அப்போது உறுப்புகளின் இயக்கம் மாறுபட்டு கை கால்கள் உதறத் தொடங்குகிறது. இதையே வலிப்பு என்று கூறுகிறோம்.

**காரணங்கள்:**

- தலையில் அடிபடுதல்
- பிறவியிலேயே மூளைவளர்ச்சிக் குறைபாடு
- மூளையில் கட்டி
- ரத்தக் கசிவு மற்றும் ரத்தம் உறைதல்
- கிருமி தொற்று
- மூளைக் காய்ச்சல்(ம) மூளை முடக்குவாதம்
- மூளை உறை அழற்சி காய்ச்சல்
- டெட்டனஸ்
- ரத்தக் குழாய் மாற்றங்கள்
- அல்சைமர் நோய்
- ரத்தத்தில் தட்டணுக்கள்
- சோடியம் அளவு குறைதல்.
- கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் ரத்தக் கொதிப்பு மூலம் வரும் வலிப்பு
- மன உளைச்சல்
- பரம்பரையாக அல்லது மரபு வழியாக வரலாம் என மருத்துவ ஆய்வுகள் இக்காரணங்களை கூறுகின்றன.

**எச்சரிக்கை:**

- இயந்திரங்களில் பணிபுரிவது
- வாகனங்களை ஓட்டுவது
- உயரமான இடங்களில் வேலை செய்வது
- தண்ணீரில் அல்லது தண்ணீருக்கு அடியில் இயங்கும் பணிகளில் ஈடுபடுவது
- மது அருந்துவது மற்றும் போதை பழக்கங்கள்
- மேலும் இந்நிலை உள்ள பிள்ளைகளை குளம் குட்டை ஏரி கிணறு ஆறு போன்ற நீர் நிலைகளில் குளிப்பதையோ அல்லது விளையாடுவதையோ அனுமதிக்கக் கூடாது.

**முதலுதவி அளிக்கும்முறை:**

- முதலில் ஒரு பக்கமாக படுக்க வைத்தல்
- சட்டை பட்டன் இடுப்பு பெல்ட் போன்றவற்றை தளர்த்தல்
- நன்கு சுவாசிப்பதற்காக காற்றோட்டம் கிடைக்க





வழிவகை செய்ய வேண்டும்.

- மின்விசிறி, கைவிசிறியை பயன்படுத்தல்
- அருகில் கூர்மையான பொருட்கள் இருந்தால் அகற்ற வேண்டும்.
- மூக்குக் கண்ணாடி செயற்கை பல் செட் இருந்தால் அகற்ற வேண்டும்.
- உமிழ் நீர் வழிந்தால் துடைத்தல் வேண்டும்.
- வலிப்பானது ஒரு சில நிமிடங்களில் நிற்காமல் 5 நிமிடங்களுக்கு மேல் இருந்தால் அந்த நபரை உடனே மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும்.

### செய்யக்கூடாதவை:

- பாதிக்கப்பட்டடுள்ள நபரைச் சுற்றி கூட்டம் அனுமதிக்கக்கூடாது
- வலிப்பு வரும்போது அவருடைய கை கால்களை அழுத்தி பிடித்து வலிப்பை கட்டுப்படுத்த முயற்சிக்கக் கூடாது.
- வலிப்பு நின்று நினைவு திரும்புவரை அவருக்கு குடிக்கவோ சாப்பிடவோ எதுவும் தரக்கூடாது.
- முழு நினைவு வந்ததை உறுதி செய்து கொண்டு (இதற்கு அவரின் பெயரை சொல்லச் சொல்லலாம்) தண்ணீரைப் பருகச் செய்யலாம்.
- வலிப்பு ஏற்படும் போது அவர்கள் கையில் இரும்புச் சாவியோ அல்லது வேறு ஏதும் பொருட்களையோ கொடுப்பதால் எந்தவித பலனும் இருக்காது.இதனால் மாறாக அவர்கள் காயம் ஏற்பட ஏதுவாக அமையும். ஆகவே அது போன்ற பொருட்களை கொடுக்கக் கூடாது.
- மூக்கில் வெங்காயச் சாறு போன்றவற்றை ஊற்றுவதும் கூடாது.

### இவர்களுக்கான மருத்துவ சோதனைகள் சிகிச்சைமுறைகள் மற்றும் மருந்துகள்

### சோதனைகள்:

- EEG
- CT (தலை)
- எம்.ஆர் ஐ (மூளை)
- PET CT (மூளை)
- சீரம் எலக்ரோலைட்டுகள்
- இரத்த குளுக்கோல் அளவு
- விரிவான சுகாதார பரிசோதனை
- நோய் எதிர்ப்பு மருந்துகள்
- ஃபெனிடோயின் ஃபெளோபார்பிடோன்
- கார்பமாசெபைன் லெவெடிராசெட்டம்.
- நரம்பு(ம) தசை வலி மருந்துகள்
- டயஸெபம் லோரோசெபம. குளோனாசெபம்
- மயக்க மருந்துகள்:
- ஐசோஃப்ளுரேன் டெஸ்ஃப்ளுரேன்(ம) கெட்டமைன்
- வேகஸ் நரம்பு தூண்கள்
- அறுவை சிகிச்சை:
- டெம்போரல லோபெக்டமி கார்பஸ்கால்-செக்டமி லெசியோனெ க்டமி.
- டிரான்ஸ்க்ரானியல் காந்த தூண்டுதல்(டிம்ஸெ)

### நிறைவு:

வலிப்புத்தாக்கங்கள் என்பது திடீர் மின்சார மாற்றங்களால் மூளையில் ஏற்படும் எதிர்பாராத அதிர்ச்சிகளின் விளைவாகும். எனவே இப்பாதிப்பில் இருக்கும் நபரை சிறுவயதிலேயே தகுந்த மருத்துவ சிகிச்சை ஆலோசனைகள் ஆரோக்கியமான உணவு முறைகள் அமைதியான சூழல் மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை இது போன்ற மீட்பு நடவடிக்கைகள் மூலம் இவர்களை இப்பாதிப்பிலிருந்து படிப்படியாக மீட்டெடுக்கலாம்.



சகோதரர். ரெக்ஸ்

# பாலைவனம் போன நிலா

பத்து மாதம் தாங்கினேன் என்
பச்சிளங்குழந்தையை ஆனால் அப்போது தெரியாது
என் புள்ள என்ன தவிக்க விடுவான் என்று,,,
புது புது சோப்பால குளிக்க வச்சி
வகை வகையா முத்தமிட்டு கலர் கலரா துணி
போட்டு அவன் தவழும் போது
ஊர் கண்ணு பட கூடாதுனு
பல கண்ணு சுத்தி போட்டேன்.

என் புள்ள சிரிப்ப பாத்து பாத்து பல நாளு சாப்புட மறந்தேன்.
அவன் என்ன அம்மானு முதல் முறையா
கூப்பிட்ட போது ஆயிரம் கீர்த்தனைகள் என் காதில் கேட்டது.
பள்ளி செல்ல அவன் அடம்பிடிக்க
முத்தமழையால அவனிடம் பேசி அன்பாக பள்ளிக்கு அனுப்பினேன்.
பள்ளி போன புள்ள
எப்ப வருவானு பாத்து பாத்து வந்த உடனே வாரி அணைத்தேன்.
உடம்பு சரியில்லாம அழுத போது
பல சாமிய வேண்டி அவன் நிம்மதியா தூங்க
நான் தூங்காம இருந்தேன்.
என் புள்ள வயிறு நிரம்ப
என் வயித்த கருவாடா காய போட்டேன்.
ஊர்திருவிழால பொம்ம வேணும்னு கேட்ட அவனுக்கு
என் ஒரு கம்மல வித்து பொம்மைங்க வாங்கி கொடுத்தேன்.

தீபாவளிக்கு பட்டாசுன்னு கேட்டான், அவன் கேட்ட
அடுத்த நிமிஷம் இன்னொரு கம்மல் கண்முன்னாடி வந்தது,
அதையும் வித்து தீபாவளி கொண்டாட வச்சேன்.
அப்புறம் என்னங்க பொங்கல் வந்துச்சு
புது துணி வேணும் வேணும்னு
அழுத என் புள்ளைக்காக
நான் வீட்டு வேலை செய்ற அம்மாகிட்ட காசு கேட்டேன்.
அவங்க கண்டபடி கேவலமா திட்டுனாங்க, சரி பரவாயில்ல எல்லாம்
என் புள்ளக்குத்தானேனு நினைச்சி



அவங்க காலுல விழுந்தேன்.
அவங்க மறுபடியும் திட்டி காச
என் மடியில பிச்சையா போட்டாங்க.
வாங்குன காசுல புது புது துணி வாங்கி போட்டு
பொங்கலும் பொங்க வச்சேன்.

மரம் ஏறுன புள்ள கீழே விழுந்து காலு உடைஞ்ச அன்னிக்கு
என் ஈரக்கொல நடுங்கி கலங்கி அலறி அடிச்சி
ஆஸ்பிட்டலுக்கு ஓடினேன். காலேஜ் படிக்க
ஆசைப்பட்ட என் புள்ளைக்காக பல பேர் கால்ல
விழுந்து சீட்டு வாங்கினேன்.
காலேஜ் பீஸ் கட்ட கை கொப்புளம் போட்டு எரிய
எரிய அதிகமாக வேலை செஞ்சேன்.
அவன் ஆசைப்பட்ட பொண்ணையே அவனுக்கு
கட்டி வச்சி அழகு பாத்தேன்.
எல்லா செஞ்சும் ஒரு நாள் ஆசையா அம்மா
உன்ன புதுவீட்டுக்கு கூட்டிட்டு போறன்னு தீடிர்னு சொன்னான்.
கேட்ட உடனே அதிர்ச்சியா இருந்தாலும்
என் புள்ள சொன்ன வார்த்தைக்காக அவன் கூட போனேன்.
போன இடத்துல புது வீட்ட பாத்ததும் அதிர்ந்து போனேன்,
உறைஞ்சி போனேன்,
உயிரோடு செத்து போனேன்,
ஏன் தெரியமாங்க ?
புது வீட்டின் பெயர்,,,,,, அனாதை இல்லம்!!!!
ஆனால் அப்பொழுது நினைத்தேன்
நான் என் மகனை பெற்றது தவமா ?
இல்லை மன்னிக்க முடியாத சாபமா?.....

# வெள்ளி விழா காணும்
# மாணவர் இல்லம்




புனித குவனெல்லா 1842 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ஆம் நாள் வட இத்தாலியில் உள்ள பிரச்சிஷோ என்னும் சிற்றூரில் பிறந்தார். அவருடைய குடும்பம் அதிக குழந்தைகளைக் கொண்ட ஒரு நடுத்தர குடும்பம் பெற்றோர் கடின உழைப்பும் இறை பக்தியும் கொண்டு வாழ்க்கையை நடத்தினர். இளம் வயதில் தம் தந்தையிடம் இருந்த கடின உழைப்பையும், தாயிடமிருந்து அமைதியையும் ஏழைகள் இடத்தில் கருணை காட்டும் உள்ளத்தையும் பெற்றார். இப்பண்புகள் அவருக்கு ஆழ்ந்த விசுவாசத்தையும், ஜெபிக்கும் ஆர்வத்தையும், இறை அன்பிலும் பிறர் அன்பிலும் வளரவும், இறை பராமரிப்பில் அசைக்க முடியாத மனம் தளராத நம்பிக்கையையும் தந்தன. இயற்கை எழில் நிறைந்த மலை ஊராகிய தம் சிற்றூரில் விடுமுறை நாட்களில், சிறுவர்களுக்கு மறைக்கல்வி மற்றும் நீதிநெறி கதைகள் நன்னடத்தை வகுப்புகள் என எளிய முறையில் கல்வி அறிவை புகட்டினார்.

இளமை முதலே இறை சித்தத்தோடு உரியவராய் அர்ப்பண வாழ்வில் சிறந்து 1866 ஆம் ஆண்டு மே திங்கள் 26 ஆம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தொன் குவனெல்லா தம் வாழ்வில் ஆன்மீகப் பணியோடு சமூகப் பணியையும் ஒன்றாக கலந்து அன்பு பணி செய்து வந்தார். உடல் ஊனமுற்றோர், மனநோயாளிகள், மற்றும் அனாதைகள் ஆகியோரை கவனிப்பதில் தனி ஆர்வம் காட்டி வந்தார். வறுமையில் வாடுவோருக்கு பொருள் உதவியும் ஞான உதவியையும் செய்து வந்தார். தம் அன்புப் பணியை தமக்கு பின்னரும் தொடரும் வகையில் குருக்களுக்கும் கன்னியர்களுக்கும் பயிற்சி அளித்தார். 1915 அக்டோபர் 24 ஆம் நாள் கோமோ நகரில் தன் பணியை முடித்துக் கொண்டு இறைவனடி சேர்ந்தார். ஆண்களுக்கான அன்பின் பணியாளர் சபையையும், பெண்களுக்கான இறை பராமரிப்பு மரியன்னை சபையையும் தோற்றுவித்து தம் நீண்ட நாள் கனவினை நனவாக்க இச்சபைகதை் தொடங்கினார்.

### மாணவர் இல்லத் தோற்றம் :

கடலூர் சாமுபிள்ளை நகர் பகுதியில் அமைந்துள்ள சிறிய கட்டிடத்தில் 1996 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் தேதி அன்று 23 மாணவர்களுடன் மாணவர் தொன் குவனெல்லா மாணவர் இல்லம் தொடங்கப்பட்டது. இவ்வில்லத்தின் முதல் இயக்குனராக அருள் பணி தனசேகர் பணி செய்தார். இந்தியாவில் தம் பணியை தொடங்க வேண்டும் என்ற குவனெல்லாவின் நீண்ட நாளைய கனவு இதனால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் கடலூர் சாமுபிள்ளை நகரில் இந்த மாணவர் இல்லம் தொடங்கப்பெற்றது ஒரு மாபெரும் செயலே.

சபை ஸ்தாபகர் தொன் குவனெல்லா, இயேசு கூறுவது போல, இந்த சின்னஞ்சிறியவர்களுக்கு செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்ற வார்த்தையை தம் குறிக்கோளாகவும் இறைத் திட்டமாகவும் கொண்டு ஏழைகள், அனாதைகள், முதியோர் ஆகியோருக்கு அன்பு பணியை செய்தார். இந்த இறையன்பு பணிகளில் ஆதரவற்ற அனாதை மாணவர்களுக்கு என்று ஓர் இல்லம் கடலூர் நகரில் தொடங்கி கடந்த 25 ஆண்டுகளாய் அன்பு பணியை செய்து வருகிறார்கள்.

### தொன் குவனெல்லா மாணவர் இல்லம்:

ஜுபிலி ஆண்டாகிய 2000 ஆண்டில் இம்மாணவர் இல்லத்தின் புதிய கட்டிடம் திறக்கப்பட்டது. பசுமை நிறைந்த அமைதியான சூழலில் கம்பீரமான தோற்றத்துடன் காண்போர் வியக்கும் வண்ணம் கண்கொள்ளாக் காட்சியாக மாணவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் தன்னகத்தே கருவாகக் கொண்டு தொன் குவனெல்லா மாணவர் இல்லம் இயங்கி வருகிறது. அனாதை மற்றும் ஆதரவற்ற ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சிகளிலும், முன்னேற்றத்திலும் உதவி செய்வது இல்லத்தின் முக்கிய குறிக்கோளாக இருக்கிறது. கடவுள் பக்தியிலும் சிறந்து வளர கற்றுக் கொடுக்கப்படுகிறது. இவர்கள் நலனிலும் வாழ்விலும் தனிக்கவனம் செலுத்தி அவர்களை முன்னேற்றுவதே தன் குறிக்கோளாக கொண்டு இவ்வில்லம் செயல்பட்டு வருகிறது. கல்வி, கலை, விளையாட்டு, பொது அறிவு, சமூக சேவை போன்ற அனைத்து துறைகளிலும் மாணவர்கள் சிறந்து விளங்க பயிற்சிப் பாசறையாக திகழ்கிறது.

### அனைவருக்கும் கல்வி:

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. – என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க கல்வியானது ஒரு மனிதனுக்கு அறிவு வளர்க்கக்கூடிய கருவியாக விளங்குகிறது என்பது உறுதி. அத்தகைய கல்வி சாதி, மத, இன வேறுபாடுகள் இன்றி எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதே எமது தொன் குவனெல்லா மாணவர் இல்லத்தின் முக்கிய நோக்கமாகும்.

### இல்ல செயல்பாடுகள்:

1. உடற்கல்வித்திறன் வளர்த்தல்
2. மருத்துவ வசதி
3. உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகள்
4. அறிவு மற்றும் கலைத்திறன் வளர்ச்சி
5. குடும்ப உணர்வும் பண்பாட்டு பழக்கமும்
6. பொறுப்புணர்வு
7. குடும்ப உணர்வு
8. சகோதர உறவு
9. ஆன்மீக தியானம்
10. மறைக்கல்வியும் நீதி போதனையும்
11. கல்வி சார்ந்த பாடத்திட்டங்கள்
12. கிராமிய கலை நடன பயிற்சி
13. உல்லாசப் பயணம்
14. ஓய்வு நேர பொழுதுபோக்குகள்
15. நூலகம் மற்றும் செய்தித்தாள்கள்
16. பரிசுகளும் பாராட்டுகளும்

### பணியாளர்கள்:

தொன் குவனெல்லா மாணவர் இல்லம் இந்த ஆண்டு 2023ல் வெள்ளி விழா கொண்டாடும் வேளையில், இவ்வில்லத்தின் 25 ஆண்டுகளில் பல்வேறு மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மொத்த எண்ணிக்கையில் சொல்ல வேண்டுமானால் 8000 மாணவர்கள் இந்த இல்லத்தில் கல்வி பயின்று தேர்ச்சி அடைந்துள்ளனர். குறிப்பாக 15 இல் இருந்து 20 குருக்கள் உருவாகியுள்ளனர். இன்னும் ஒரு சில அருட் சகோதரர்கள் குருக்களாக உருவெடுக்க குரு மடத்தில் பயிற்சி பெற்று வருகிறார்கள். மேலும் பல்வேறு துறைகளில் நம் மாணவர்கள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### உதவிக்கரம்:

இத்தகைய இல்லத்திற்கு, கல்விப் பணி ஆற்றிட எங்களோடு இணைந்து உங்களால் இயன்ற உதவிகளை செய்திட வேண்டுமாய் அன்போடு அழைப்பு விடுக்கிறோம். நம் ஆண்டவர் இயேசு கூறியது போல சின்னஞ் சிறியோருக்கு செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்ற வார்த்தையினை மனதில் கொண்டு மென்மேலும் பல மாணவர்கள் இவ்வில்லத்தின் வழியாக கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேற ஒன்றிணைவோம்!

**தொன் குவனெல்லாவின் வழிநடப்போம்!**
**அன்பை அகிலமாக்குவோம்**

–அருள்பணி. இம்மானுவேல் மரியான்



# வரலாற்று சின்னங்களாக

## தலைமுறைதோறும் வாழ..

'நீ 18 வயது நிரம்பியவன் என்பது எனக்கு தெரியும். 'நீ இதைச் செய்' அல்லது 'இதைச் செய்யாதே' என்று சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை. ஆனால் ஒன்றைச் சொல்வதற்கு எனக்கு உரிமையுண்டு. ஓர் ஆசிரியர் என்பவருக்கென்று வரையறுக்கப்பட்டப் பண்பு (Character) உண்டு. அந்தப் பண்பு உன்னிடம் இல்லையென்றால் அல்லது வளர்க்கப்படவில்லையென்றால் நீ ஆசிரியராக இருக்க முடியாது. நீ உன்னுடைய விருப்பு வெறுப்புகளையெல்லாம் உன்னுடைய வாழ்வின் இலக்கிற்காக தியாகம் செய்ய வேண்டும். ஓர் ஆசிரியருக்குரிய பண்புகளை நீ உனதாக்கிக்கொள்ள முடியவில்லையென்றால், நீ இங்கிருந்து போகலாம்.

நீ ஒரு சாதாரண 18 வயது இளைஞனைப் போன்று கூட்டத்தில் ஒருவராக இருந்து மறைந்தும் விடலாம். அல்லது எல்லோரும் முன்மாதிரியாகக் கொண்டு உற்றுநோக்கக்கூடிய ஓர் எடுத்துக்காட்டான இளைஞனாக நீ வாழலாம். நீ இலக்கோடு வாழ நினைத்தால் உன்னுடைய விருப்பு-வெறுப்புகளைத் தியாகம் செய்தாக வேண்டும்.

தன்னுடைய 19வது வயதில் புனே நகரில் கம்ப்யூட்டர் புரோகிராமிங் பயிற்சியாளராக வீ.வீ.ரங்கராஜன் பணியாற்றியபோது ஓர் ஆசிரியருடைய பண்புகளைத் தனதாக்கிக் கொள்ளாமல், ஒரு சாதாரண 19 வயது இளைஞனைப் போன்று தன் வகுப்பில் இருந்த பெனாட் பின்டோ என்ற மாணவியுடன் பழகிக் கொண்டிருந்ததைக் கண்ட அவருடைய மேலாளர் பீட்டர் கிறிஸ்டியன் கூறியவைதாம் மேற்கண்ட வார்த்தைகள்.

இந்தச் சிந்தனைகள்தான் வீ.வீ.ரங்கராஜன் வாழ்வின் பாதையை மாற்றியது. புதிய பிறப்பெடுத்து வாழ்வின் இலக்கு என்னவென்று கண்டு கொண்டார். இன்று 'மஹாத்ரேயா, ரா' என்னும் புதிய மனிதராக வாழ்வை முழுமையாக வாழும் கலையை 'இன்பினிதேயிசம்' இதழ் மூலமும், 'ஆல்மா மாத்தர்' என்னும் அமைப்பின் மூலமும் பலருக்கும் வாழும் கலையைக் கற்றுக்கொடுத்து வருகிறார்.
மாறி வரும் இக்காலத்தில் மனிதர்கள் தங்கள் வாழ்வின் இலக்கை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். நாம் எதற்காக இவ்வுலகில் படைக்கப்பட்டோமோ அல்லது அழைக்கப்பட்டோமோ அதற்கேற்றவாறு நாம் நம்மை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ஒரு துறவி என்றால், ஓர் ஆசிரியர் என்றால், ஒரு மாணவர் என்றால், ஒரு பெற்றோர் என்றால் அவர்கள் அந்த வாழ்விற்கான பண்பு நலன்களைப் பெற்றாக வேண்டும். இல்லையென்றால் அவர்கள் வாழ்வு என்பது 'பிறந்தோம், இருந்தோம், இறந்தோம்' என்றாகிவிடும்.

ஒரு மாணவன் தன்னுடைய விருப்பு வெறுப்புகளை (டி.வி., சமூக வலைத்தளங்கள், பொழுது போக்குகள், சமூகக் கூடுகைகள், உல்லாசப் பயணங்கள், சோம்பேறியின் தூக்கம்....) தன்னுடைய இலக்குக்காகத் தியாகம் செய்கின்றபோது அவர் தன் வாழ்வை அர்த்தமுள்ளதாக்க முடியும், இலக்கை

அடைய முடியும், வரலாற்றுச் சின்னமாக மாற முடியும்.

இறைவாக்கினர் எரேமியா மென்மையானவராகவும், ஆரோன் வழிவந்த குருவாக அரசனுக்காகப் பலி செலுத்தும் வாய்ப்பு பெற்றிருந்தவர். அவர் அப்படியே வாழ்ந்திருந்தார் என்றால் அவரை நாம் இன்று நினைவுகூரப் போவதில்லை. மாறாக அவரை ஓர் இறைவாக்கினராக கடவுள் தேர்ந்தெடுத்தபோது, அதற்கு ஏற்றவாறு தன்னையே உருவாக்கிக் கொண்டார். அவரின் அந்த இறைவாக்கினர் பணி மிகவும் கடுமையானதாகவும், எந்த அரசனுக்குப் பதிலாக பலி செலுத்த அழைக்கப்பட்டாரோ அந்த அரசனுக்கு எதிராக இறைவாக்கு உரைப்பவராகவும், தன்னுடைய குடும்பத்தால் ஒதுக்கப்படவும், தன்னால் மிகவும் அன்பு செய்யப்பட்ட பெண்ணை துறக்க வேண்டியதாகவும், சித்தரிக்க முடியாத அளவுக்குத் துன்பங்கள் நிறைந்ததாகவும் இருந்தபோதும், எரேமியா தன்னுடைய இலக்கை நோக்கிப் பயணித்தார். தன்னுடைய விருப்பு-வெறுப்புகளையெல்லாம் விட்டு விட்டு, இறைவாக்கினர் என்ற இலக்குக்காக அதற்கேற்ற பண்பு நலன்களை தன்னகத்தே உருவாக்கிக் கொண்டார். ஒருவேளை தன்னுடைய வாழ்வின் அர்த்தத்தை உணராமல் இருந்திருந்தார் என்றால், ஒரு சாதாரண ஆரோன் வழிவந்த குருவாக இருந்திருப்பார்.

புனித பவுல்கூட தான் சவுலாக இருந்தபோது இருந்தவையெல்லாம், தான் அழைக்கப்பட்ட பவுல் என்னும் நிலைக்கு உகந்ததல்ல என்பதை உணர்ந்து தன்னையே மாற்றிக்கொண்டார். வாழ்விற்கு அர்த்தம் கொடுத்தார். கிறிஸ்தவத்தை உலகுக்கு எடுத்துச் சென்றார். உலக மக்களின் தாயும், நம்முடைய அன்னையுமான மரியா தன்னுடைய வாழ்வில் இறைவனின் திட்டம், வாழ்வின் இலக்கு என்ன என்பதை உணர்ந்து தன்னையே அர்ப்பணித்தார். தன் வாழ்வின் வழியாக தன்னுடைய பிறப்பிற்கு அர்த்தம் கொடுத்தார். உலகிற்கெல்லாம் நலமளிக்கும் அன்னையாகத் திகழ்கின்றார்.

நாமும் நம்முடைய வாழ்விற்கு அர்த்தம் கொடுப்போம். அதற்காக நம்முடைய விருப்பு-வெறுப்புகளைத் தியாகம் செய்யத் தயாராவோம். வரலாற்றுச் சின்னங்களாக தலைமுறைதோறும் வாழ்வோம்.

# பொன் மொழிகள்

1. அன்பில்லாத இடத்தில் தான் கோபம், முட்டாள் தனம், விரோதம் எல்லாம் இருக்கும்.

2. அன்பில் அச்சம் கலந்திருக்க முடியாது. நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மால் அன்பு செலுத்த முடியாது.

3. பல காயங்களுக்கு கண்ணீர் மருந்து, சில காயங்களுக்கு பிரிவு மருந்து, எல்லா காயங்களுக்கும் சிறந்த மருந்து அமைதி.

4. அடுத்தவர்களை பாராட்டும் போது அவர்களின் மனமும் குளிரும், நம் மனதிலுள்ள பொறாமை குணமும் அழியும்

5. சபதங்களும் சவால்களும் காற்றில் பறக்கும் வார்த்தைகளாக இருக்க கூடாது

6. ஓலை குடிசையில் பிறந்தான் மகன். கோடீஸ்வரன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார் தந்தை.

7. போராடி வாழ்வதற்கு வாழ்க்கை ஒன்றும் போர்க்களமல்ல. அது பூ வனம் ரசித்து வாழ்வோம்.

8. அரசியலை போல் தான் வாழ்க்கையும் பல எதிர்பார்ப்புகளை கொடுத்து ஏமாற்றுவதில்.

9. மொத்த பிடிவாதத்தையும் உடைக்கும் வலிமை பிடித்தவரின் மௌனத்துக்கு உண்டு.

10. அழ நினைத்தால் ஆசை தீர அழுதுவிடு, கண்ணீரின் முடிவில் சுமைகளும் கரையுமென்றால்...

11. சகித்துக்கொண்டு வாழ்வதல்ல வாழ்க்கை. சலிக்காமல் வாழ்வதே வாழ்க்கை.

12. அடிக்கடி கண்ணீர் விட்டால் உன் நியாயமான கண்ணீருக்கும் மதிப்பிருக்காது.

13. கடந்து போன நாட்களில் உன் துன்பத்திற்கான காரணத்தை பட்டியலிடு: இனி கடக்கபோகும் நாட்களில் அவை மீண்டும் நிகழாமல் தடுக்கலாம்.

14. காத்திருக்கும் பொறுமை நமக்கிருந்தாலும் காலத்துக்கு இல்லை...

15. மனமும் கண்ணாடியைபோல்தான் உடையும் வரை யாரையும் காயப்படுத்துவதில்லை.

# முட்டையில் நுழைந்த ஆவி

திருவாளர் லூர்து எஸ்ராஜ்



முட்டை விலை குறைந்தது; எனவே காய்கறி வண்டிக்காரரும் முட்டை கொணர்ந்தார். 'கடைக்கு சென்று முட்டை வாங்கி வர வேண்டிய நடை மிச்சம்' என்று சொன்ன அம்மா முட்டைக் கூடையுடன் காய்கறி வண்டியை நோக்கி நடந்தார்.

ஆகா! இன்றைக்கு முட்டைக் குழம்பு!' என்று மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடினான் நவீன். 'முட்டை வாங்க கூடை மட்டும்தானே கொண்டு செல்ல வேண்டும். அம்மா ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் கொண்டு செல்கிறாரே. ஏன்?' சில வினாடிகளே சிந்தித்த நவீன் காய்கறி வண்டியை நோக்கி ஓடினான்.

அம்மா அறுபது ரூபாய் கொடுத்து இருபது முட்டை வாங்கினார். மேலும் ஒவ்வொரு முட்டையையும் தண்ணீரில் போட்டு எடுத்தார்.

' அம்மா, நாங்கள் பெரிய வியாபாரியிடம் வாங்கும் போது அவர் முட்டைகளைக் கழிக்க விட மாட்டார். நீங்கள் இப்படிக் கழித்தால் நான் என்ன செய்வது?' வண்டிக்காரர் தனது நிலையைச் சொன்னார். 'நான் காசு கொடுத்துத்தானே வாங்குகிறேன். எனது காசுக்குச் சரியான முட்டை நீ தர வேண்டுமல்லவா?' என்று சொன்ன அம்மா இரண்டு முட்டையை வண்டிக்காரரிடம் திருப்பிக் கொடுத்து பதிலாக வேறு இரண்டு முட்டை வாங்கிக் கொண்டார்.

' என்னம்மா, நீங்கள் முட்டை வாங்கும் போது என்னவோ செய்தீர்களே, அது என்ன? முட்டையைப் பற்றி ஆராய்ச்சி எல்லாம் செய்வீர்களா?' நவீன் கேட்டான்.

ஆம் முட்டைகளை ஆய்வு செய்துதான் சமைப்போம் அப்படியானால் நீங்கள் முட்டையில் எனக்கு ஏதாவது செய்து தருவீர்களா?

'முட்டைப் பணியாரம் வேண்டுமா அல்லது முட்டை அடையா, ஆம்லேட்டா, எது வேண்டும் சொல்' என்று கேட்டார் அம்மா.

'அம்மா, எனக்கு இன்று முட்டைக் குழம்பு வேண்டும். ஆனால் நான் அது பற்றிக் கேட்கவில்லை. ஒவ்வொரு மாணவனும் ஏதாவது செய்து வர வேண்டும் என்று அறிவியல் ஆசிரியர் சொல்லி இருக்கிறார். திங்கட்கிழமை அறிவியல் பாட வேளையில் அனைவருக்கும் நான் அதைக் காட்ட வேண்டும். எனக்கு ஏதாவது செய்முறைப் பயிற்சி போல் செய்யக் கற்றுத் தருவீர்களா?

'நிச்சயமாய் கற்றுத் தருவேன். ஆனால் இன்று நான் முட்டை வாங்கும்போது என்ன செய்தேன் என்று கவனித்தாயா?' அம்மா கேட்டார்.

' ஓ, கவனித்தேன், நீங்கள் தண்ணீரில் முட்டையைப் போட்டுக் கழுவி எடுத்தீர்கள் அவன் சொன்னதைக் கேட்டு அம்மா சிரித்தார். ' அறிவியல் படிக்கும் மாணவனுக்கு எதையும் உற்று நோக்கிப் பார்த்து அறியும் திறமை வேண்டும். ஏன் என்ற கேள்வி எழுப்பிய பதில் பெற வேண்டும். நீ ஒரு சிறந்த அறிவியல் மாணவனாய் இருக்க வேண்டும்.



சரி அம்மா. நான் ஒரு சிறந்த அறிவியல் மாணவனாய் இருப்பேன்' என்று உறுதி சொன்னான் நவீன், முட்டைகளும் அதில் மூழ்கின. ஆனால் சில முட்டைகள் தான் நீரில் மிதந்தன அல்லது மிதக்க ஆரம்பித்தன. அந்த முட்டைகள் எல்லாம் கெட்டுப் போனவை. அவைகளைத் திருப்பிக் கொடுத்து வேறு முட்டை பெற்றுக்கொண்டேன்: என அம்மா சொன்னார்.
'முட்டை கெட்டுப் போவது ஏன்?' அவன் கேள்வி எழுப்பினான்.
'அந்த முட்டையில் ஆவி நுழைந்திருக்கிறது.
'என்ன! ஆவியா? கெட்ட ஆவியா அல்லது இறந்துபோன மனிதர் ஆவியா?

'நான் அதைப் பின்னர் சொல்வேன்' என்றவர் சமையலைக் கவனிக்க சென்றுவிட்டார்.

திங்கட்கிழமை காலையில் அம்மா அவனுக்கு இரண்டு முட்டை கொடுத்தார். அவன் அவைகளை ஆராய்ந்து பார்த்தான். அதில் வித்தியாசம் ஒன்றும் இல்லை. இரண்டும் ஒன்று போலவே இருந்தன.

அம்மா அவனிடம் இருந்து முட்டையை வாங்கி ஒரு தட்டில் வைத்தார். அவர் கையால் ஒரு முட்டையைச் சுழற்றிவிட்டார். அது நன்றாகச் சுழன்றது. அது சுழலும்போது ஒரு விரலால் தொட்டார். உடனே அந்த முட்டை நின்றது. பின்னர் அவர் அடுத்த முட்டையைச் சுழலவைத்தார். அது சுழலும் போது அதை ஒரு விரலால் தொட்டார். அது நிற்காமல்
மீண்டும் சுழன்றது.

'என்ன அம்மா இது! ஆச்சரியமாய் இருக்கிறது. ஒரு முட்டை சுழல்கிறது. அடுத்த முட்டை சுழலாமல் நின்று விட்டது இது ஏன்?

'ஆவி நுழைந்த முட்டை!' என்று சொன்னார் அம்மா. அதைக் கேட்டு அவன் திகைப்படைந்தான்.

' உனக்கு ஓர் உண்மையைச் சொல்கிறேன். நான் முட்டை வாங்குடம் போது என்ன செய்தேன்? முட்டையைத் தண்ணீரில் போட்டேன் . நல்ல முட்டை தண்ணீரில் முழ்கியது கெட்டுப்போன தண்ணீரில் போன முட்டை நீரில் மிதந்தது. ஏனென்றால் அதனுள் வாயு உண்டாகி இருக்கிறது. அதனால் அது மிதந்தது.

ஆகா, அருமையான விளக்கம். ஆவி புகுந்த முட்டை என்று மகிழ்ச்சியாகச் சொன்னான் நவீன்.

ஆனால் தட்டில் இருந்த முட்டைகளில் ஒன்று வேகவைத்த முட்டை, மற்றது வேகாத முட்டை. வேகவைக்காத வேகாத முட்டை சுழலும்போது தொட்டாலும் அது நிற்காமல் மீண்டும் சுழல்கிறது. ஏனென்றால் முட்டை சுழலும்போது அதனுள் இருக்கும் நீர்மங்களும் சுழல்கிறது. விரலால் அதைத் தொட்டதும் முட்டையின் மேலோடு சுழற்சியை நிறுத்தினாலும் நீர்மங்கள் சுழற்சியை நிறுத்தவில்லை. அதனால் முட்டை மீண்டும் சுழன்றது. இவை சடத்துவ விளைவு (EFFECT OF INERTIA) என்று கூறுவார் என்று சொன்னார் அம்மா.

அந்த இரண்டு முட்டைகளையும் எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியாக பள்ளிக்கூடம் சென்றான் நவீன். ஏனென்றால் ஆவி புகுந்த முட்டை என்று சொல்லி ஒரு கலக்கு கலக்கலாம் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

# விவிலிய வினாடிவினா– 03

01. மோவாபு
02. கைம்பெண்
03. ஆரோனின் மகன்
04. குருதி
05. உப்பு
06. விரிகுளம்பு இல்லை
07. அபிகயிலின் மகன்
08. பறவை
09. யோசுவாவின் தந்தை
10. எல்சாபானின் தந்தை
11. குஞ்சுகளை
12. கோத்தமல்லி, முத்து
13. உருவின
14. குருதி
15. உன் இனத்தவனிடமிருந்து
16. சரி
17. சரி
18. தவறு
19. சரி
20. தவறு
21. ஆண்டவர் மோசேயிடம்
22. யோசுவா மோசேயிடம்
23. ஆண்டவர் மோசேயிடம்
24. மோசே மக்களிடம்
25. ஆண்டவர் மோசேயிடம்

**சரியான பதில் எழுதி பரிசு பெற்றவர்கள்**

சகோதரி. கிளாடிஸ் மேரி
ரோசாலி நீதி தாஸ்

**சரியான பதில் எழுதியவர்கள்**

சகோதரி. சந்தான சாந்தா
சகோதரி. ஜோவித்தா மேரி
சகோதரி. பிரேமா
சகோதரி. சகாயமேரி
சகோதரி. பிளாரன்ட் மேரி
திருமதி. லெயோனி
திருமதி. பிரான்சிஸ்காள்
திருமதி. அந்தோணி செசிலியாள்
ஆரோக்கியமேரி
புஷ்பராஜ்
நிர்மலாமேரி
விக்டர்



# விவிலிய வினாடிவினா போட்டி

## விவிலிய வினாடிவினா போட்டி – 04

### புத்தகங்கள்: ,2 அரசர்கள்,1,2 குறிப்பேடு, எஸ்ரா, நெகமியா

**விடையளிக்க**

1. யோவாசை ஒளித்து வைத்தது யார்?
2. தாவீதுக்கு முதுமையில் உதவிய பெண் யார்?
3. சமாரியா என்ற மலையை 80 கிலோ வெள்ளிக்கு விலைக்கு வாங்கியது யார்?
4. ரேகபயாமின் தாய் யார்?
5. கோவில் வேலையை கண்காணித்து ஒருசேர நின்ற மூவர்?

**பொருத்துக**

6. அகியா – கடவுளின் மனிதர்
7. தில்கத்பில்னேசர் – இத்தியர்
8. அர்த்தக்சஸ்தா – மன்னர்களின் மன்னர்
9. ஓபேது – அசீரிய மன்னன்
10. சேமாயா – முதியவர்

**நிரப்புக**

11. அந்த ஆள் திஸ்பேயைச் சார்ந்த ...................................... தான்.
12. ஆண்டவர் என் தலைவரான அரசருடன் இருந்தது போல் ........................... உடனும் இருப்பாராக!
13. படைகளின் கடவுளாகிய ஆண்டவர்மீது நான் .............................. கொண்டவனாய் இருந்து வருகிறேன்.
14. ஏனக்கு முன்னிருந்த ............................... அதிக ..................................... விதித்து மக்களை வதைத்தனர்.
15. ஆண்டவர்உசாவை அழித்ததை முன்னிட்டு தாவீது ...............................

**சரியா தவறா?**




16. சவுலின் புதல்வி மீக்கால் தாவீதை புகழ்ந்தாள்.
17. யோவாசு தாவீது நகரில் மில்லோ என்ற கோட்டையை வலுப்படுத்தினார்.
18. நெகேமியா எருசலேமுக்கு வந்து மூன்று நாட்கள் தங்கி இருந்தார்.
19. ஏசர்கததோன் ஒரு பெலிஸ்திய மன்னன்.
20. ரெகபெயாமின் மகன் அபியா.

**யார் யாரிடம் கூறியது**

21. என்னை உடனே அப்புறப்படுத்துங்கள், ஏனெனில் நான் பெரிதும் காயமடைந்துள்ளேன்.
22. நீர் அகசியாவோடு சேர்ந்து கொண்டமையால் ஆண்டவர் உம் திட்டங்களை அழித்து விடுவார்.
23. உமது போரடிக்கும் களம் இருக்கும் இடத்தை எனக்கு கொடும்.
24. ஆண்டவரின் ஆவி என்னைவிட்டு எவ்வழியாகச் சென்று உன்னிடம் பேசிற்று என்று சொல்.
25. அமைதியாயிருங்கள், ஏனெனில் இன்று புனித நாள்.

குறிப்பு: கேள்விகள் பொது மொழிபெயர்ப்பு விவிலியத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.


25 YEARS OF PRIESTHOOD
Honouring
the Faithfulness
in Priesthood
நீதியும் நேர்மையும்
நீரோடைப்போல் பாய... (ஆமோஸ் 5:24)
குருத்துவ
வெள்ளி விழா
Fr. Peter
Ordained: 28.04.1998 - 2023
வெள்ளி விழா காணும் அருட்தந்தை பீட்டர் அவர்களுக்கு எங்களது வாழ்த்துக்களும் ஜெபங்களும்...

கடலூர் – சாமுப்பிள்ளை நகர், குவனெல்லா மாணவர் இல்லத்தின்

# வெள்ளி விழா






கடலூர் – சாமுப்பிள்ளை நகர்
குவனெல்லா மாணவர் இல்லம்
25–ம் ஆண்டு வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது.
கண்ணுக்குள் கருவிழியாய், மண்ணுக்குள் வைரமாய்
ஏழை எளிய மாணவர்கள் ஏற்றம் கண்டிட
உணவு உறைவிடம் தந்து, கல்விக் கண் திறந்து
ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி
தேவையறிந்து சேவையாற்றிவரும்
இயக்குநர், அருட்தந்தையர்கள், மாணவர்கள்
அனைவருக்கும் வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக.

25 Years

**வாழ்த்துகின்றோம்! ஜெபிக்கின்றோம்!**